உ

# சண்முக
# சுப்பிரமணிய
# நினைவு முகம்



தலைநகர் வணிக வேந்தர்கள்
கருவில் -

## இ. சண்முகம்
## இ. சுப்பிரமணியம்

அவர்களின்

**நினைவு ஏடு**

1989-03-08, 09

விபவ, மாசி 25, 26

கொழும்பு

பிரபல வணிகர்களும்

ஊர்காவற்றுறை, சுருவிலைப்

பிறப்பிடமாகக்

கொண்டவர்களுமான

**இளையதம்பி சண்முகம்**

**இளையதம்பி சுப்பிரமணியம்**

அவர்களின்

# நினைவு மலர்

A. KUMARATHASAN
KALAIMAGAL ROAD
ARIYALAI WEST
JAFFNA



வெளியீடு:
சுருவில் ஐயனார் கோவில் பரிபாலன சபை
சுருவில்,
ஊர்காவற்றுறை.
இலங்கை.
விபவ, மாசி 25, 26

பதிப்பு:
செட்டியார் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

உ



அமரர் இளையதம்பி சண்முகம் அவர்கள்

தோற்றம்:
29-01-1921

மறைவு:
06-02-1989



அமரர் இளையதம்பி சுப்பிரமணியம் அவர்கள்

தோற்றம்:
10-08-1925

மறைவு:
06-02-1989

# பதிப்புரை

இளையதம்பி சண்முகம், இளையதம்பி சுப்பிரமணியம் சகோதரர்கள் கொழும்பிலே மிகப் பிரபலமான வர்த்தகர்கள். இவர்கள் எதிர்பாரா வேளையில் — காலமில்லாக் காலத்தில் (1989-02-06) தமது இன்னுயிரை இழந்தார்கள்.

தாம் ஈட்டிய பொருளில் ஒரு பகுதியைச் சமய, சமூகப் பணிகளுக்காகச் செலவிட்டார்கள்; கோயில் அமைத்தார்கள்; குடமுழுக்குச் செய்தார்கள்.

செட்டிகுளப் பகுதி மாணவர்களின் நலன் கருதி செட்டிகுளத்திலே பாடசாலையை அமைத்தார்கள். மாணவர் பூங்கா ஒன்றினையும் உருவாக்கினார்கள்.

இன்னும் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணி, கொழும்பு, செக்கட்டித் தெரு கதிரேசன் கோயில் திருப்பணி, நையினாதீவு நாகபூஷணி அம்மன் கோயிற் திருப்பணி முதலியவைகளுக்கு முன்னின்று உதவினார்கள்.

சுருவில் அவர்களது சொந்த ஊர். இவ்வூரிலே கோயில் கொண்டு அருள்பாலிக்கும் அரிகரபுத்திர ஐயனார் மீது அளவற்ற பற்றும், பக்தியும் உடையவர்கள். இக்கோயிலின் திருப்பணி குடமுழுக்கு உள்ளிட்ட அனைத்துத்

திருப்பணிகளுக்கும் பெருமளவு பொருளுதவி புரிந்தார்கள். திருவிழாக் காலங்களில் அன்னதானம் வழங்குவதற்காக ஐயனுர் கோயிலருகே அன்னதான மண்டபம் அமைத்துக் கொடுத்தார்கள்.

1975ஆம் ஆண்டில் அமரர் சண்முகம் தலைவராகவும் அமரர் சுப்பிரமணியம் பொருளாளராகவும் கடமையாற்றிய குழுவினர் ஐயனுர் கோவிலில் பாரிய திருப்பணிகள் செய்து முடித்து புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகத்தை மிகச் சிறப்பாக நடத்தியதை நாம் கண்டுகளித்தோம்.

ஐயனுருக்கு இராஜகோபுரம் அமைத்தல், சித்திரத்தேர் செய்தல் முதலிய திருப்பணிகளை ஆற்றிடப் பெரிதும் அவாவுற்றிருந்த வேளையில் ஆவல் நிறைவேருமலே இருவரும் அமரராகிவிட்டமை பேரிழப்பாக அமைந்து விட்டது.

இருவரினதும் திடீர் மறைவு உற்ருர், உறவினர், அயலார், நண்பர்கள், வர்த்தகப் பெருமக்கள் முதலிய பல்லாயிரக் கணக்காேருக்குத் தாங்கொணுத் துயரைத் தந்துள்ளது, சுருவில் ஐயனுர் கோவில் பரிபாலன சபை நிரப்பமுடியாத பேரிழப்பினுல் தவிக்கிறது.

அமரர்களின் மறைவையொட்டிப் பலர் வழங்கிய புகழுரை, வியப்புரை, வரலாற்றுரை முதலியவற்றை ஆரமாக்கி நினைவேடாக வெளியிடுகின்ருேம்.

அமரர்களின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்ருேம்.

சுருவில்
1989-03-03

த. சண்முகலிங்கம்,
சுருவில் ஐயனுர் கோவில்
பரிபாலன சபை

''உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.''

– குறள்

# நித்தியானந்த சாந்தி நிலைக்கட்டும்

அமரத்துவம் எய்திய திரு. இளையதம்பி சண்முகம் J. P. அவர்களதும், திரு. இளையதம்பி சுப்பிரமணியம் அவர்களதும் அகால மரணம் யாவரது உள்ளங்களையும் நெகிழ்ந்துருகச் செய்யும் நிகழ்வாகும்.

அவர்கள் தமிழ்ச் சமுதாயத்தின் பேரன்பர்களாகவும் இறைபக்தி, சைவசமயப் பற்று தரும சிந்தனை நிறைந்தவர்களாகவும் வாழ்ந்து மற்றவர்களுக்கும் எடுத்துக்காட்டாக விளங்கியவர்கள்.

நீத்தாரையிட்டு நாம் நினைவு கூரும்பொழுது, ஜீவாத்மா நிலையானது, அழியாதது, என்றும் உள்ளது என்ற பேருண்மையை மனதிற் கொண்டு ஆறுதல் அடைய வேண்டும்.

நாம் உண்மை அன்புடன் பரம் பொருளிடம் இரந்து வேண்டிக் கொள்ளல் இதுவாகும்.

அவர்களது ஜீவாத்மாக்களை இனிப் பிறப்புறுமல், நித்தியானந்த சாந்தி நிலையைத் தம் பாதார விந்தங்களில் சேர்த்தருள வேண்டுமென்பதே. அவ்வண்ணம் நாம் எல்லோரும் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசாரிய ஸ்வாமிகள்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,
நல்லூர் – யாழ்ப்பாணம்.
1989-02-23

''ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு.''

—குறள்

# செயற்கரிய
# செய்தவர்கள்

"ஈதலிசைபட வாழ்த லதுவல்ல
ஊதிய மில்லை யுயிர்க்கு"

ஈழத் திருநாடாம் யாழ்ப்பாணத்தின் புராதன சரித்திரப் பெருமை வாய்ந்தது ஊர்காவற்றுறை.

அதன் அழகான சிறு கிராமம் சுருவில்.

அங்கே, நமது மனதில் கண்களில் தோன்றுவது அருள்மிகு ஐயனார் கோவில்.

அக் கோவில் நித்திய நைமித்தியங்கள் சிறப்பாகக் குறைவின்றி நடப்பதால் அவ்வூர் வாசிகள் அனைவரும் பெருநிதி பெற்றவர்களாய் வாழ்கின்றார்கள்.

இவர்களில் இராம லக்ஷ்மணர் போல் வாழ்ந்த திரு. இ. சண்முகம், திரு. இ. சுப்பிரமணியம் அவர்களை அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள்.

இவர்களுடைய சகோதரர்கள் திரு. சிற்றம்பலம், திரு. நல்லதம்பி. திரு. மாணிக்கம், திருமதி யோகம்மா மாணிக்கம் அவர்களையும் எமது சிறு பிராயம் தொடக்கம் நன்கறிவோம்.

இவர்கள் அருள்மிகு ஐயனார் கோவில் முதல் கும்பாபிஷேகத்தைச் சிறப்புறச் செய்து வைத்தனர்.

திரு. சண்முகம் அவர்கள் தலைவராகவும், திரு. சுப்பிரமணியம் அவர்கள் பொருளாளராகவும் இருந்து ஆலயத் திருப்பணிகள் செய்து இரண்டாவது கும்பாபிஷேகத்தைச் செய்தார்கள்.

கொழும்பு - யாழ்ப்பாணத்தார் கதிரேசன் கோவில், ஆலய பரிபாலன சபைத் தலைவராக திரு. சண்முகம் அவர்கள் இருந்து திருப்பணிகள் செய்து கும்பாபிஷேகத்தைச் சிறப்புற நடாத்தி வைத்தார்.

தொடர்ந்தும் திரு. சண்முகம் அவர்கள் தலைவராகவும்; திரு. சுப்பிரமணியம் அவர்கள் பொருளாளராகவும் இருந்து ஐயனார் கோவில திருப்பணிகளுக்கு மாதந்தோறும் நிதி அளித்து திருப்பணிகள் முடிவுற்று புநர் கும்பாபிஷேகம் செய்ய எண்ணியிருந்தவேளை இவர்கள் நம்மிடம் இல்லை.

செயர்க்கரிய செய்தவர்கள், என்றும் அழியாப் புகழ் தேடிக்கொண்டவர்கள்.

இவர்களது ஆத்மா சாந்திபெற அருள்மிகு ஐயனார் பெருமான் அருள் தருவதாக!

ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்
நயினாதீவு - இலங்கை,
1989-02-23

"பிரதிஷ்டாபூஷணம், சிவாகமஞானபானு"
சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்
ஆதீன பிரதம குரு

# சிறந்த பண்பாளர்கள்

அழகாபுரி - குபேரபட்டினம் என்று பலராலும் புகழ்ந்து பேசப்படும் வயல் வளமும் சோலை வளமும் நிறைந்த சுருவில் ஊரில் அருள்மிகு ஞானவிளக்காம் அரிகர புத்திரன் திருப்பாதங்களை அனுதினமும் துதித்து அவன் அருளால் சகல செல்வங்களும் பெற்று வாழ்ந்த ஸ்ரீமான் இளையதம்பியும் மனைவி மாரிமுத்துவும் செய்த புண்ணியத் திறல் அவதரித்த புத்திரர்கள் திரு. இ. சண்முகம், திரு. இ. சுப்பிரமணியம் ஆவர்.

இவர்கள் சிறு வயதிலிருந்தே கடவுள் பக்தியும் அன்பும் பிதா மாதா சகோதரர்களிடம் அன்பும் கொண்டவர்கள். இவ்விருவர்களும் தமது சகோதரியாம் திருமதி யோகம்சாவிடம் மிக அன்பு மிகுந்தவர்கள், அவர் சொற்படி நடக்கும் தீரர்கள். அவர் நம் குலதெய்வமாகிய ஐயனார் மேல் அதிக பக்தி உள்ளவர்கள்.

அவர்கள் திருவிழாக் காலத்தில் அடியார்கள் அமுது செய்ய அன்னதான மண்டபம் மிக்க செலவில் அழகாகக் கட்டிமுடித்தார்கள்.

இவர்களின் இன் சொல்லும் சிரித்த முகமும் அள்ளிக் கொடுக்கும் கொடையும் இனிமேல் காணமுடியாது. தெய்வம் கொடுத்த பொருட் செல்வத்தைக் கை நிறைய அள்ளிக்கொடுக்கும் கொடை வள்ளல்கள்.

எல்லாம் வல்ல இறைவன் இவர்கட்கு நல் பேற்றினை அருளுமாறு இறைஞ்சுகிறேன்.

ஐயனார் கோவில் தேவஸ்தானம்,
சுருவில்.
1989-02-23

சோ. நடராசக்குருக்கள்

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
சிறந்தாரை எண்ணிக்கொண் டற்று."

—குறள்

# அருளாளரும்
# பொருளாளரும்

ஸ்ரீமான் இளையதம்பி சண்முகம், ஸ்ரீமான் இளையதம்பி சுப்பிரமணியம் இவர்கள் யாழ்ப்பாணத்து தீவுப்பற்று சுருவிலூரில் பிறந்து கொழும்பு நகரில் வியாபார நோக்கத்தை நிறைவு செய்யும் முகமாக அங்கிருந்து தங்கள் கடமைகளையும் மன விருப்பங்களையும் நிறைவு செய்து வரும் நேரத்தில் அவர்களுக்கு ஏற்பட்ட திடீர் மறைவு அறிந்து திடுக்குற்றேன்.

அன்னார் இன்றைய உலகில் எமது மக்களின் மனதில் விட்டு நீங்காத் தெய்வமாகவும் ஏழைகள் பங்காளியாகவும் தொண்டனாகவும் மதிக்கப்பட்டு வந்திருப்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள்.

சிவப்பணிகள், கோயிற் திருப்பணிகள். விவாகங்கள். கும்பாபிடேகங்கள், ஏழைகளுக்கு போதும் போதும் என்று வாரி வழங்கிய பெருமக்கள். இவர்களுக்குத் தெய்வ நம்பிக்கை மிகமிகச் சிரியமுறையில் இருப்பதைக் கண்டு பொருளாளரும் அருளாளரும் ஏக காலத்தில் மதித்து வந்தார்கள்.

இதனால் அந்த இடத்தில் ஒரு தலைவனாகவும் எல்லோராலும் உயர்ந்த இடத்தில் வைத்து மதிக்கப்பட்டுவந்த ஒரு பெருமக்கள் இவர்கள். இப் பூவுலகில் அருளாளராகவும் பொருளாளராகவும் வாழ்ந்து வந்த காலத்து இப்படியான ஒரு மரணம் ஏன் ஏற்பட்டது. ஏன் என்று ஒரு திகைப்பு. அதாவது செய்வது வேறு. அனுபவிப்பது வேறு.

ஆகவே இப்பிறப்பில் அவர்கள் செய்ததான தருமம் விளைந்து அதன் பயனை ஒரு பிறப்பில் அனுபவிப்பார்கள்.

முன்வினை விளைந்து இப்பிறப்பில் அனுபவத்திற்கு இப்படி வந்து முடிந்தது,

ஆகவே இதுதான் எங்களுக்கு ஏற்படும் நியதி.

இதின் உண்மை நிலையை அறிபவர்களுக்கு வியப்பேதும் இல்லை.

இன்று அவர்கள் எங்கள் மத்தியில் இல்லை. மக்கள் யாவருக்கும் அவர்கள் இன்றில்லாத இடைவெளியை யாவராலும் ஈடுசெய்யமுடியாது,

அன்னாரின் குடும்பத்தவர்கள் சாந்தியடையவும் அவர்களின் ஆன்மா சிவபதப் பேறெய்தவும் எல்லாம் வல்ல இறைவனை வாழ்த்தி வணங்குவோமாக.

ஸ்ரீலஸ்ரீ கை. திருஞானசம்பந்தக்குருக்கள்

காரணவாய், வேலணை
ஆதீனம்
யாழ்ப்பாணம்.
1989-02-23

# இடுக்கண் களைவதாம் நட்பு

அமரர் இளையதம்பி சண்முகம் சுருவில் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வர்த்தகத் துறையில் ஐந்தாறு பிறைகண்ட பொன்விழா நாயகர். 1936 ஆம் ஆண்டு தலைநகர் கொழும்பு வந்து, அவர் மைத்துனர் மாணிக்கத்திடம் வர்த்தகத்துறை அரிச்சுவடி கற்றவர். தான் பெற்ற அநுபவத்தை மூலதனமாகக் கொண்டு சகோதரர் இ. சிற்றம்பலம், நல்லதம்பி. மாணிக்கம் துணையுடன் சிறுகத் தொடங்கி பெருக வாழ்ந்தவர் அவர். வர்த்தகத் துறையில் தான் பெற்ற அநுபவத்தை நண்பர்கள், உறவினர்கள், ஊரவர்களுடனும் பகிர்ந்து கொண்டார். அந்த உண்மையை கடந்த முப்பது ஆண்டுகட்கு மேலாகத் தலைநகர மக்கள் தரிசித்துள்ளார்கள்.

அமரர் சண்முகம் அவர்கள், இளையவர் அமரர் சுப்பிரமணியத்துடன் இணைந்து "உம்பிச்சி அன்கோ" நிறுவனத்தை பலர் மெச்சும் வண்ணமும் ஏனையோர்க்கு வழிகாட்டியாகவும் நடத்தி வந்துள்ளார்.

1938 ஆம் ஆண்டு முதல் நான் அமரர் அவர்களை அறிவேன். அறிவேன் என்று கூறுவதை விட அன்று முதல் அவர் என் அருமை நண்பர் என்று கூறுவதே சாலப் பொருந்தும். அவர் என் வழிகாட்டியெனில் அது மிகைக் கூற்று அன்று.

அமரர் இ. சண்முகம் அவர்களின் மறைவு என் நிலையில் சொல்லில் அடங்கா சோகத்தை உள்ளத்தே பரப்பி விட்டது. என் மட்டில் இச்சோகநிலை காலத்தால் அழியாதது.

அமரர் அவர்களைத் தலைநகர வர்த்தக வட்டாரம் என்றும் மறக்க மாட்டாது. அவரின் அகால மரணம் ஆரோக்கியமான வர்த்தக வளர்ச்சிக்கு ஊறு விளைவித்து விட்டது.

என்றாலும்;

அமரர் சண்முகம் அவர்கள் வர்த்தகத் துறையில் வரலாறு படைத்த வரலாற்று நாயகன்; சாதனையாளன்; வல்லவன்: அதே பொழுதில் நல்லவன்.

தர்மதானங்கட்கு சிறப்பாக ஆலயப்பணிகளுக்கு அள்ளிக் கொடுத்த வள்ளல். பூதவுடல் மறைந்தாலும் அவரின் பண்பு, கொள்கை, நட்பின் பிடிப்பு அனைத்தும் அவர் சார்ந்த வட்டத்தை விட்டு அகலாது. அமரர் ஆன்மா சாந்தியடைவதாக.

89, புதுச்செட்டித்தெரு,
கொழும்பு 13.
1989-02-23

த. நீதிராசா,
சமாதான நீதவான்
மூதவை. முன்னாள் உறுப்பினர்

# யார் செய்வார்?

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை''

அமரர்கள் இளையதம்பி சண்முகம், சகோதரர் சுப்பிரமணியம் இருவரும் சைவத் திற்கும் தாம் பிறந்த மண்ணிற்கும் அளப்பரும் தொண்டாற்றி பல்லுயிர் ஓம்பிய பெரு மக்கள்.

திருக்கேதீஸ்வரத்தில் அன்னப்பாவாடை சாத்தி மெய்யன்பர்களிற்கு தம்பதிகளாக இருந்து அன்னம் பாலிக்கும் காட்சி வருடா வருடம் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இப்படியான தொண்டை இனிமேல் யார் செய்வார்?

சிவ தொண்டு, கல்வித் தொண்டு, செட்டிக்குளத்தில் பலருக்கு வேலைவாய்ப்பு முதலியவற்றைச் சலியாது செய்த புண்ணிய சீலர்கள். இவர்களுடைய இடத்தை அன் னாரின் சந்ததியார் நிரப்புவார்களாக?

அமரர்கள் இளையதம்பி சண்முகம், சுப்பிரமணியம் சகோதரர்களின் ஆன்மா நித்திய வீடு பேற்றைப் பெற்று சாயுச்ய பதவியை எய்தப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்
யாழ்ப்பாணம்.
1989-02-25

க. கனகராசா
சமாதான நீதவான்

''இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு.''

— குறள்

# ஆலமரம் சரிந்து விட்டது

சுருவிற் கிராமத்திலே ஊருக்கு நிழல் கொடுக்கும் ஆலமரம் போன்றுள்ளது திரு. ப. இளையதம்பியவர்கள் குடும்பம். அது பஞ்சபாண்டவரைப்போல ஐந்து பெருங் கிளைகளும் தாங்கி நின்ற விழுது ஒன்றுடனும் செறிந்து நின்றது.

அதன் மூன்று கிளைகள் ஒன்றின் பின் ஒன்ருக விடை பெற்று விட்டன. மூத்த கிளையான திரு. சிற்றம்பலம் அவர்கள் சுருவில் மண் அழப்பிரிந்து விட்டார். அடுத்துச் சென்ற திரு. நல்லதம்பியவர்கள் நீர்கொழும்பில் இளவரசராக வாழ்ந்து மறைந்து விட்டார். மற்றைய திரு. மாணிக்கம் இரண்டாவதாகப் பறந்து கரம்பன் மண் அழச் சென்று விட்டார்.

மிகுதியாயிருந்த இரு கிளைகளும் தாங்கி நின்ற விழுது ஒன்றும் மரத்தைப் பொலிவு செய்து கொண்டிருந்தது. திடீரென்று பென்னம்பெரிய புயலொன்று கொழும்பு மாநகரத்தில் வீசியதால் அந்தோ! மிகுதி இரு கிளைகளும் அடியோடு பாறிச் சரிந்து விட்டன. ஆலமரம் நின்ற அடையாளத்திற்கு விழுது ஒன்றுதான் தப்பி நிற்கின்றது.

திடீரென இம்மண்ணுலகை விட்டுப் பிரிந்த இராமலக்குமணர் போன்ற அருமைச் சகோதரர்கள் திரு. சண்முகம், திரு. சுப்பிரமணியம் இருவரையும் அறியாதவர் எங்குமிலர்.

சுருவில் மண்ணில் பிறந்து இளமைக் காலத்தில் கல்வியை முடித்துக்கொண்டு, சகோதரி கணவர், திரு. வயித்திலிங்கம் மாணிக்கம் அவர்களின் அரவணைப்பில் வாழ்ந்து அங்கு பெருவணிகராகத் திகழ்ந்தார்கள். ஐம்பது ஆண்டுகளாகக் கொழும்புப் பட்டினத்தில் இவர்களின் ஒளி வீசியது. பழமரந் தேடும் பறவைகள் போல ஆயிரக்கணக்கானவர்கள் இவர்களின் தாபனங்களிற் பணியாற்றியுள்ளார்கள். அவர்களுட் பலர் இன்று நல்வாழ்வு வாழ்கின்ருர்கள். இந்த நிலைக்கு இவர்களே முன்னேடிகள் எனலாம்.

கொழும்பு வாழ் மக்களுக்கு இ. ச. இ. சு என்ருல் நன்கு புரியும். பெயரைச் சொல்லாது பெரிய முதலாளி சின்ன முதலாளி என்றுதான் யாவரும் அழைப்பார்கள். தமது இளமைக் காலத்தே கணவனை இழந்த அருமைச் சகோதரி யோகம்மா மாணிக்கத்தின் வியாபார நிலையங்களையும் கண்போல் பார்த்து வந்த காரணத்தால் யாவரும் ஒரு குடும்பமாகவே வாழ்ந்து வந்த சிறப்பு எவருக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

மறைந்த மாமணி திரு. சண்முகம் அவர்கள் நாரந்தனையில் உத்தமராய் வாழ்ந்த திரு. கனகசபையவர்களின் புதல்வி மனேன்மணியை மணந்து ஒன்பது பிள்ளைகளுக்குத் தந்தையானுர். அடுத்த மேதை திரு. இ. சுப்பிரமணியம் சொந்த மண்ணில் உறவினராய திரு. வி. நாகலிங்கம் அவர்களின் அருமைப் புதல்வி கங்காலட்சுமியை மணந்து ஐந்து பிள்ளைகளுக்குத் தந்தையானுர்.

ஊரில் நல்லவர்களாகவும், நாட்டிற்கு உபகாரிகளாகவும் வாழ்ந்தனர்; வணிகத் துறையில் முன்னேடிகளாகவுமிருந்தனர். ஈட்டிய பொருளைத் தரும காரியங்களுக்கும் செலவிட்டனர். இருவரும் ஒத்த மனத்தினர். சகோதரியிடம் பெருமதிப்பும் அன்புமுடையோராயிருந்தனர்; பெற்ற மக்களுக்கும் நல்வழி காட்டியுள்ளனர். அண்ணனும் தம்பியும் ஊருக்கு வந்தால் சுருவில் கிராமமே எதிர்கொள்ளும் பான்மையில் இருந்தார்கள்.

இந்த இரு மேதைகளுக்கும் ஒரே நேரத்தில் பெரும் பிரிவு ஏற்பட்டு விட்டது. செய்தி கேட்டதும் யாவரும் அயர்ந்து விட்டனர். மலை சரிந்து விட்டது போன்ற நிலையாகி விட்டது. துயரச் சம்பவம் சுருவிலிலே தங்கியிருந்த சகோதரி யோகம்மாவுக்கு மெல்ல எட்டியது. கேட்டதும் அவர் அயர்ந்து விட்டார். சுருவில் கிராமமே அழுது விட்டது. எங்கும் அழுகைதான். கொழும்பில் மனைவியர் இருவரும் என்ன ஆனுர்களோ? அங்குள்ள தமிழ் அன்பர்கள் கண்ணீர் வடித்தனர். இரங்காத கல்நெஞ்சங்களும் அழுது விட்டன, ஒரே நேரத்தில் இருவர் இழப்புக்களையும் கேட்டது துயரந் தருவதாகி விட்டது.

விதி யாரைத்தான் விட்டது. பிரிந்தவர்களுக்கீடு செய்ய அருமைப் பிள்ளைகளிருக்கிருர்கள். அருமைச் சகோதரியுமிருக்கிருர். எங்கள் ஆறுதலை விட இறைவன்தான் ஆறுதல் கூறவேண்டும். நம்மை விட்டுப் பிரிந்த இரு தவமணிகளுக்காக நாம் அனைவரும் ஒன்றுகூடிப் பிரார்த்திப்போம்.

''என்றும் காணப்பெருத ஆனந்தம் நிறைந்த அழகையுடையதும் சிறந்த அமுதமென்றும், ரஸத்திருல் நிறைந்துள்ளதும் மாசற்ற திருமேனியையுடையதும் மேன்மையான மந்திரவடிவாய் அமைந்துள்ளதுமான உமது திருவடியை நாம் தினமும் வணங்குவோம்'' என்றுகூறி அவர்களின் உயிர் சாலோக பதமடையுமாறு எல்லோரும் வேண்டிக் கொள்வோமாக. சுபம்.

காம்பொன்
1989-02-23

கரம்பொன் கிராமத்தவர் சார்பாக
எழுதியவர்
பண்டிதர் சோ. தியாகராசபிள்ளை

''உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.''

—குறள்

# பொருள் உள்ளார்க்கும் இவ்வுலகம் இல்லையா ?

இந்த உலகம் யாருடைய கையில் இருக்கிறது? யாருக்கு இல்லை? என்ற கேள்வியைக் கேட்டே உலகச் சிந்தனையாளரான திருவள்ளுவர் ''பொருள் உள்ளவர்கள் கையில்தான் இவ்வுலகம் இருக்கிறது'' என்ற பொருத்தமான பதிலையும் கூறினர். இது முற்றிலும் உண்மையாகி - உலகத்தின் நடைமுறையும் ஆகிறது.

எலோருடனும் பழகி எல்லோருக்கும் உதவி ஏல்லோரையும் உயர்த்தி வாழ வைத்த மனிதருள் மாணிக்கமே அண்மையில் அமரரான திரு. இ. சண்முகம் அவர்கள். சின்னவயதில் இருந்து சின்னச் சின்ன விடயங்களிலும் சிந்தனையைச் செலுத்திப் பெரிய பெரிய காரியங்களையெல்லாம் செய்துமுடித்த பெரியாரே சுருவில் சண்முகம் அவர்கள். நேரம், நினைப்பு, உழைப்பு என்ற மூன்று அம்சங்களே இப்பெரியாரையும் இவருடன் பிறப்பான திரு. இ. சுப்பிரமணியம் அவர்களையும் முன்னுக்குக் கொண்டு வந்தன என்று கூறுவேன். நான் இவர்களுடைய பணிமனைக்கு கடமைக்குச் சென்ற போது என் பார்வையில் இவர்களுடைய உயர்ச்சிக்கு மேற்குறித்த மூன்று அம்சங்களே காரணமாயிருந்ததை அவதானித்தேன்.

பொருளை ஈட்டலிலும், காத்தலிலும், வகுத்தலிலும் வல்லவர்களான இச்சகோதரர்கள் ஈருடலும், ஒருயிருமானவர்கள் என்பதற்கு இவர்கள் இறப்பே சாட்சியானது. ஒரு உயிரை இரண்டாக்கி சேவலும் மயிலுமாகிய திருச்செந்தூர் முருகன் ஒரு உயிரை சண்முகம், சுப்பிரமணியமுமாக படைத்துவிட்டிருந்தான். இப்படைப்பின் இரகசியம் இவர்கள் இறப்பிலேயே நமக்குப் புரிகின்றது.

இணைபிரியாத இந்தச் சகோதரர்கள் எந்த நிலையிலும் பிரிவினையை விரும்பாதவர்களாக வாழ்ந்து காட்டியவர்கள். பிரிவினை என்பது விட்டிற்குள்ளும் நாட்டிற்குள்ளும் குழப்பத்தைக் கொண்டுவந்துவிடும் என்ற கருத்தில்; ஒற்றுமையை எல்லா நிலைகளிலும் பணிய பெருந்தகையாளரை, இதனாலேயே இவர்களுடைய இழப்பு மனைவி, மக்களுக்கு மட்டுமல்ல, சகோதரி யோகம்மா அவர்களுக்கு மட்டுமல்ல, உடன் பிறந்தோர் ஊழியருக்கு மட்டுமல்ல உலகத்தின் ஒரு பகுதிக்கே பேரிழப்பாகியது.

ஓடி, ஓடி உழைத்து ஊருக்கெல்லாம் கொடுத்த கைகள் எங்கே?

என்ன செய்கிறாய் எப்படி இருக்கிறாய் என்று கேட்ட திருவாய்கள் எங்கே?

முயற்சி செய் என்று கூறிய நாக்குகள் எங்கே?

பிறர்துன்பத்தில் கரிசனையோடு கண்ணோட்டம் செலுத்திய கண்கள் எங்கே?

தர்மசிந்தனைகளோடு இயங்கிய இதயங்கள் எங்கே?

ஒரு நிறுவனத்தை வளர்த்து பலகிளைகளை உருவாக்கி பலருக்கும் வேலைவாய்ப் பளித்து வாழவைத்த மனித தெய்வங்கள் எங்கே...? எங்கே...?

என் இறைவா !

உன்னை ஒன்று கேட்பேன், உண்மை சொல்ல வேண்டும். பொருள் உள்ளார்க் கும் இந்த உலகம் இல்லைத்தானா?

ஓம்... சாந்தி... சாந்தி... சாந்தி...

P. B. உம்பிச்சி & கோ.
கொழும்பு.
1989-02-23

ந. அமிர்தலிங்கம்
(முகாமையாளர்)

''ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி.''

—குறள்

# அரசறிய வீற்றிருந்த வாழ்வு ...

நான் ஊர்காவற்றுறை மருத்துவ மனையிலே பணியாற்றுகின்றவன். இதன் காரணத்தினால் எனக்கறிமுகமானவர் ஏழைகளின் இதயங்களில் வாழும் 'அமுதசுரபி' யான யோகம்மா அம்மையார். இவ்வம்மையாரின் மூலம் அறிமுகமானவர்கள்தான் அமரர்கள் இ. சண்முகம், இ. சுப்பிரமணியம் ஆகியோர். சகோதரர்கள் இருவரும் யோகம்மா அம்மாவின் உடன்பிறப்புக்கள்.

சுருவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர்களை, தலைநகரின் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகர்களாக மட்டும் தமிழ்கூறும் நல்லுலகும் தலைநகரும் அறிந்திருக்கவில்லை. வான்புகழ் ஞானிகூறும் 'உள்ளூர் பயன் மரங்களாயும்' ஊரகத்து ஊறுணிகளாகவும்' 'பிணி நீக்கும் மருந்தாக'வும் கண்டனர்.

உள்ளத்தால் பொய்யாது ஒழுகி இன்று உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் நிலைவூற்றுகி விட்ட அமரர் திரு. சண்முகம், அமரர் திரு. சுப்பிரமணியம் இருவரும் நாடறிந்த நன்மக்கள் மட்டுமல்ல சங்க நூல் கூறும் ''இரட்டையர்களாக'' வாழ்ந்து மரணத்திலும் உடன் பிறப்புக்கள் என்பதை நிரூபித்தமை எம் இதயத்தையெல்லாம் தொடுகின்றது.

தலைநகரில் தன்னிகரற்ற அரசு கண்டு மிரளும் மதிநுட்பம் நிறைந்த முதலாளிகளான இளையதம்பியின் குழந்தைகளை ''பெற்றாவின் மன்னர்கள்'' என அழைத்துப் போற்றியது நாடு. ஏன் வர்த்தக நுணுக்கங்களை அரசே அவர்களிடம் பாடம் கேட்டது. இப்படி அரசறிய வாழ்ந்த அமரர்களிடம் யான் அறிந்த பண்புகள் திரைகடல் மூலம் பெற்ற செல்வத்தை, சுயநலமும் சூழ்ச்சியும் அரசோச்சும் இன்றைய கால கட்டத்தில் வீட்டில் பூட்டி வையாது 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பினர்'.

'மக்கள் பணியே மகேசன் பணி' என ஏற்று எம் தீவக மக்களில் ஆயிரம் ஆயிரம் அநாதைகளின் ''சரணாலயமாக'' வீழ் பொறுத்தாங்கு வாழும் தனிச்சிறப்பு அமரர் இளையதம்பியின் குழந்தைகளுடன் உடன் பிறந்த 'தெய்வப்பண்பு' என்றால் எவரும் ஏற்றுக் கொள்வார்கள்.

இப்படி ஏழை பங்காளராய் வள்ளுவன் காட்டும் 'ஒப்புரவொழுகலுக்கு' உதாரண புருடராய் வாழும் இவர்களைப் போன்றவர்கள் உள்ளவரை உலகம் வாழும்.

'உண்டாலம்மா இவ்வுலகம் ...
... தமக்கென முயலா நோந்தாழ்
பிறர்கென முயலுனர் உண்மையானே'

என புறநானூற்றடிகாட்டும் தமக்கென வாழாது பிறர்க்குரியவராக வாழும் பாங்கும்

'பண்புடையார் பட்டுண்டுலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்'

என்ற குறளமுதமும் அவர்கள் வாழ்விற்கு உரைக்க வந்துள்ளனவா?

'இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு'

உண்மைப் பொருள் இறைவன் என்பதை உணர்ந்து அரண்பணியும் 'இது அவன் திருவென' அறிந்து மனித நேயப்பணிகளும் இவ்வுலகில் புரிந்தவர்களுக்கு நல்வினை தீவினைகட்கு உட்பட்டு மீண்டும் இப்பூமியில் பிறக்கின்ற தலையிடி இல்லையென வள்ளுவன் வாக்கின் மூலம் நாம் நம்பலாம். எனவே இவ்வரிகளுக்கு இலக்கணமாக வாழ்ந்த அமரர்கள் இருவரும் இனிப் பிறப்பற்றவர்கள். இறைவனடியில் இளைப்பாறுவார்கள். 'இகபரசுகம் பெற்ற பாக்கியவான்கள்...

அமரர்கள் இருவரது இழப்பு தீவகமக்களுக்கும் தமிழ் மண்ணிற்கும் பேரிழப்பாகும். பிரிவுக்காற்றாது துயருறும் அனைவர்க்கும் மாவட்ட மருத்துவமனை ஊழியர்களதும் புங்குடுதீவு மக்களதும் அஞ்சலியும் அனுதாபமும் உரியது ஆன்ம சாந்திக்காய் பிரார்த்திப்போம். நன்றி.

சாந்தி!

டாக்டர் ஆ. பேரின்பநாதன்
தலைவர்

புங்குடுதீவு பாணாவிடை
சிவன் தேவஸ்தானம்
புங்குடுதீவு.
1989-02-25

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்."

—குறள்

# ராமலட்சுமணர்

வாயடங்கித் தூங்காத வங்கக்கடல் அலைகள் தாம் அடங்கித் தாலாட்டும் தங்கத் தீவங்களின் தலைநகராம் லைடன்தீவிலே சின்னஞ்சிறு கிராமமான சொர்ணபுரி என்ற சுருவில் ஈன்றெடுத்த 'ராம லட்சுமணரே'' சண்முகம், சுப்பிரமணியம்.

துள்ளிக் குதித்து துடுக்கடங்கி பள்ளிப்படியால் இறங்கி திரைகடல் ஓடியும் திரவியம்தேட குபேரபுரியாம் கொழும்பை நாடினர்.

அக்கால வணிக விலாசனும் வல்லானும் மைத்துனருமாகிய வி. மாணிக்கத்தின் கீழ் (வி. மாணிக்கம் சகோதரர்) பணிபுரிந்து அடக்கம், ஒடுக்கம், அமைதி, கீழ்ப்படிவு ஆதியாம் நற்பண்புகளுடன் வர்த்தகம் பயின்று வல்லுனராகினர்.

பயங்கரயுத்தப் புயல் ஓய்ந்து கார்மேகம் கலைந்து நாடு சீரடைந்தது. 1947 முதல் பெரும் வணிகராய்ப் பேரும் புகழும் சீரும் சிறப்புமாய் செல்வம் தேடினர். நாலாறு விலாசங்கள் நாட்டில் இருதயத்திலே மிளிர்ந்தது. கொழும்பு முதல் கொடுங் கடல்தாண்டி சிங்கப்பூர், சீனு, சிறப்புற்றயப்பான் வரை வங்கங்கடலாலே வாணிபம் நடத்தினர் - தேன் சிட்டுப்போல் செல்வம் திரட்டினர்.

நாட்டிலே பஞ்சம் பசிவாட்டியது. கடமை வீரன் கண் தூஞ்சமாட்டான் என்றபடி சண்முகம் கருங்கடல் செங்கடல் தாண்டி அரிசி, சீனி, அமெரிக்கன்மாவு மைத்துனர் பெயரிலே மாணிக்கம் மீன்டின், பருப்பு, கிழங்கு, பால்டின், யாவும், கப்பல் கப்பலாய் கொழும்புத்துறை முகம் கண்டது. கிழங்கு மன்னன் என்ற பெயரும் பெற்றுர். நாடேவியந்தது. நாட்டரசே அதிர்ந்தது, பாராட்டியது. சீராட்டியது. சமாதான நீதவான்பட்டமும் கொடுத்து உற்சாகம் ஊட்டி, உதவியும் செய்தது.

ஓடோடித் திரட்டி வந்தான் ''ராமன் உறங்காமல் விழித்திருந்து கட்டிக்காத் தான் லட்சுமணன்.'' இந்நிலைதான் எல்லோர் உள்ளத்திலும் ஊற்றெடுத்தது. விழிக்கச் செய்தது.

பெற்றதாயகம் பெருமை கொண்டது. உதவி பெற்றது, ஆயிரக்கணக்கான மக்கள் உழைப்பு ஊதியம்பெற்றனர். பல குடும்பங்கள் சிறப்பான வாழ்வைப் பெற்றனர். தன்னவர் என்ரே அன்னியர் என்ரே வேற்றுமை பாகுபாடில்லாமல் அள்ளிக் கொடுத்தனர். நாடு, நகர் நாற்புறமும்வர்த்தகராகினர். வாயாரப் புகழ்ந்தனர். கடைகள் எத்தனை, கட்டிடங்கள் எத்தனை, கம்பனிகள் எத்தனை. வள்ளல் சண்முகம் வழிகாட்டினுர். அவர் கருணை வழிகாட்டினுலே கடைகள் தோன்றும். தமிழர் என்ரே சிங்களவர் என்ரே முஸ்லீம் என்ரே சாதி மத பேதம் பாராத பெருவணிகராகினுர்.

செட்டிகுளத்திலே ஆயிரக்கணக்கான ஏக்கர் காடழித்து நாடாக்கினர். நாடே போற்றும் பெரும்விவசாயியானுர். ஆயிரக்கணக்கான விவசாயிகள் நன்மை பெற்றனர். நவீன யந்திரங்கள். நவீன விவசாயமுறைகளால் பலன் அடைந்தனர். 'மெனிக்பாம்" இன்று உறங்குகின்றது. கட்டிக்காத்த செட்டிகுள விவசாய மக்கள் பெட்டிப்பாம்பாயினர். பாலர் பாடசாலை கோடிக் கணக்கான ரூபாய் காட்டிலே புல்லும் புதருமாய் மந்து வளர்ந்து மறைந்துவருகிறது. மந்தைகள் எல்லாம் தஞ்சம் இன்றித் தவித்தலைகின்றன.

தூங்காது ஓடோடி உழைத்தவன் தூங்கிவிட்டான். நீண்டதூக்கத்தை இறைவனே தூண்டி விட்டான்.

நல்மனைவியும், மூன்று ஆணும், ஆறு பெண்களும், மருமக்களும், பேரர்களும், மட்டுமல்ல அண்டிப்பிழைத்த ஆயிரம் மக்களும், பிறந்த நாட்டுப் பெரும்குடி மக்களும், பெருவணிகர்களுமே பேரிடிக்காளாகினர். அந்தோ இறையன் கருணை.

ஏங்கித்தவிக்கும் எல்லோருக்கும் இறைவனே கருணை ஒளிகாட்டவேண்டும். ராமலட்சுமணன் போன்று தம்பியாருடன் இணைபிரியாது வாழ்ந்து காட்டி மறைந்த திரு. சண்முகம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக. சப்ததீவு மக்களின் சார்பிலும், எங்கள் சங்கத்தின் சார்பிலும் இவ் அனுதாபச் செய்தியை சமர்ப்பித்து இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஜனன மரணம் என்னும் பயமே
அதனை மாற்றி ஆழவரும் நற்பயனே

பிறந்தவன் இறப்பதும்
பகலும் இரவும்
சுகமும் துக்கமும் - இயற்கையானது உறுதியானது.

புங்குதீவு அபிவிருத்தி சமூக சேவா சங்கம்
புங்குதீவு - 3
1989-02-28.

ச. சதசிவம் சேவியர்
செயலாளர்

''சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு.''

— குறள்

# அடையா நெஞ்சக்கதவும்
# அகாலத்தில் அடைபட்டதே

கொழும்பு வாழ் தமிழ் மக்களில் ஒரு தக்காராக பிரகாசித்தவரே சமாதான நீதவான் உயர்திரு இ. சண்முகம் அவர்கள். கொடுத்துச் சிவந்த கைகள் கர்ணனுடையது என்று படித்திருக்கிறோம். கொடுக்கவேண்டும் என்று நினைத்துச் சிவந்த நெஞ்சுடையராகவும் சமயம், சமுதாயம் முதலிய துறைகளை மேம்படுத்த முயன்றதுபோல்' கல்வித் துறையின் மேம்பாட்டிலும் அக்கறையுள்ளவராக இவர் வாழ்ந்தமை பாராட்டுக்குரியதாகும்.

எங்கள் கொழும்பு - தொண்டர் வித்தியாலயம் எதுசெய்தாலும் திரு. சண்முகம் அவர்களை அணுகி உதவி கேட்பது வழக்கம். அவரும் தமது உதவிக் கரங்களை வித்தியாலயத்திற்காக நீட்டியதும் உண்டு. நாங்கள் புதிதாக மூன்று மாடிக் கட்டிடத்தினை கட்டித் திறப்பு விழா செய்தபோது; ஒரு திறப்பு விழா வெளியீட்டு மலரையும் வெளியிட எண்ணினோம். எண்ணியதைச் செயல்படுத்த சண்முகனாரை அணுகினோம். இப் பெரியார் மலர் வெளியீட்டுச் செலவைத் தாமே ஏற்று எங்கள் கல்விச் சேவைக்கு மதிப்பளித்தார்கள்.

இவர்களுடைய கரிசனைக் கதவு ஓர் அடையாத நெடுங்கதவே. சடையப்ப வள்ளலின் இல்லம்போல் ஒருநாள் செல்லினும், இருநாள் செல்லினும், பலநாள் பலரோடு பயின்று செல்லினும் தலைநாள் போன்ற விருப்புடன் விளங்கியதாகும். இவர்களுடைய வழித்தோன்றல்களும், நிறுவனத்தினரும் இவர் பணியைத் தொடர்ந்து செய்ய இறைவனைப் பிரார்த்திப்பதோடு சண்முகம் + சுப்பிரமணியம் சகோதரர்களின் ஆன்மா சாந்தி அடையப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்" — குறள்

கொ/ தொண்டர் வித்தியாலயம்,
கப்பித்தாவத்தை,
கொழும்பு - 10.
1989-02-28

க. மகாதேவா
அதிபர்

# மரகதத்தீவின்
# பயன்மரங்கள் சரிந்தன

மரகதத்தீவாகிய எங்கள் இலங்கை நாடு வளர்முக நாடுகளில் ஒன்று. இதனுடைய வளர்ச்சி இங்கு வாழும் மக்களின் மனவளர்ச்சியைப் பொறுத்தே அமைந்தது. ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு மனவளர்ச்சியுள்ள நிதிவளம் படைத்தோரே முக்கியமானவர்கள். இவர்களே நாட்டின் பிரதான பிதாக்கள் ஆவார்கள். தள்ளாத விளைவும் தக்காரும் தாழ்வில்லாத செல்வரும் சேர்ந்த நாடே உருப்படியான நாடாகும்.

ஒரு நாட்டின் செல்வர்கள் பேரறிவும் பெரும் உள்ளமும் பெற்றவர்களாக இருப்பார்களானல் அவர்களுடைய செல்வம் பொதுக் குளம் - கிணறு போன்றும்', பொதுவில் உள்ள பயனுள்ள மரம் போன்றும் எல்லோருக்கும் பயன்படும் என்று கருதிய திருவள்ளுவர் - இவைகுறித்து இரண்டு திருக்குறளையும் தந்தார். இவ்விரு திருக்குறள்களும் சண்முகமும், சுப்பிரமணியமும் போன்றதாக எமக்குத் தெரிகிறது. இப்பெருந்தகைகள் இப்பெருங் குறள்களுக்கு இலக்கணமாகியவர்களே.

''ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறிவாளன் திரு''.

''பயன்மரம் உள்ளூர் பழுத்தற்ருல் செல்வம்
நயனுடை யான்கண் படின்''.

பயன் கிணருய் - பயன் மரமாய் எங்களுக்கும் நாட்டிற்கும் உதவியவர்களே திருவாளர்கள் சுருவில் சண்முகம் அவர்களும் அவர் தம்பியாரான சுப்பிரமணியம் அவர்களும். இவர்கள் திடீரென அகால மரணமடைந்தமை எமக்குத் தாங்கொணுத் துன்பமாகிவிட்டது. இத்துன்பத் துடிப்பிலிருந்தும் திகைப்பிலிருந்தும் அமைதிநிலைக்கு மீளமுடியாது தவிக்கின்ருேம்.

நிறுவனத்தின் சேவைகளைப் பேணிப் பாதுகாத்து வாழ்வித்த பயன் மரங்களான இரு மனிததெய்வங்களை இழந்த நிலையில் நாங்கள் இருக்கின்ருேம். இவர்கள் குடும்பத்தார்களும் எங்களைப் போன்று துணையைப் பிரித்த அன்றில் பறவைகளாய் அவதிப்படுகிருர்கள். அவர்களுக்கு ஆறுதல் கூறுவதோடு ஊழியர்களாகிய நாங்களும் அமைதியடைந்து இறந்த ஆன்மாக்களின் சாந்திக்காக எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சேவையாளர்கள்.
வ. மாணிக்கம் சகோதரர் அமைப்பு

கொழும்பு
1989-02-28

# பஞ்சகாலத்தைப் பஞ்சாக்கியவர்கள்

அகராதிகள் சொல்லின் பொருளை விளங்கவைப்பது போன்று சில பெரியார்கள் வாழ்க்கையின் விளக்கங்களாகத் திகழ்ந்து மறைகிறார்கள். அவர்களின் பிறப்பு வளர்ப்பு, ஆளுமை முதலியவற்றால் பிறர் உள்ளங்களில் சிமான்களாக நிறைந்து விடுகிறார்கள். நெஞ்சிருக்கும்வரை நினைவிருக்கும் இவர்கள், வீட்டில் பிறந்தாலும் நாட்டின் பிள்ளைகளாவார்கள்.

அண்மையில் அகால மரணமடைந்த வ. மாணிக்கம் சகோதரர் அமைப்பின் வழித்தோன்றல்களான இ. சண்முகம் (ஜே. பி.) அவர்களும் இவர் தம்பியரான இ. சுப்பிரமணியம் அவர்களும் வர்த்தகத் துறையில் அவர்தம் அத்தாளுல் ஆட்பட்ட மைத்துனர்களாகி நாட்டின் முதுகெலும்பாய் நின்று நிமிர்ந்து நாட்டின் பிள்ளைகளாய் கொண்டாடப்பட்டவர்கள். இவர்களுடைய முயற்சியால் நாடு நுகர்பொருள் தட்டுப் பாடடைந்த வேளைகளிலெல்லாம் பண்டசாலைகளைத் தங்கள் கொள்வனவுகளால் நிரப்பியவர்கள்.

இலங்கை வரலாற்றில் கற்காலம், பொற்காலம், இருண்டகாலம் என்று இருந்தது போன்று பஞ்சகாலம் என்றொரு காலமும் இருந்தது. இந்தக்காலத்தில் இவர்கள் வெளிநாடுகளில் தொடர்பு கொண்டு நாட்டின் பஞ்சத்தை நீக்கி மக்களைப் பட்டினிச் சாவிலிருந்து காப்பாற்றியவர்கள். இக்காலத்தில் தொழிலால் இவர்களுக்கு இலங்கை அரசு என்றும் நன்றி பாராட்டி வர்த்தகத் தொழில் கொடுக்கல் வாங்கல்களுக்கு அனுசரணையாய் துணைநின்றது. பொருளியல் நோக்கில் அரசையும், மக்களையும் காப்பாற்றிய பெரியவர்களாகவே இவர்கள் கணிக்கப்பட்டார்கள். மனித முயற்சிகள் மரணமடைவதில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக இவர்களின் நிறுவனங்கள் இன்று பலருக்கு வாழ்வு கொடுத்துக்கொண்டிருக்கின்றன.

இவ்விருவர் வாழ்விலும் இணைந்த இயல்புகளும். நிகழ்ந்த சம்பவங்களும், உயர்ந்த வாழ்க்கைக் கண்ணோட்டங்களும் இவர்கள் உடலால் இரண்டுபட்டாலும் உயிர், உள்ளம் உணர்வுகளால் ஒன்றுபட்டவர்கள் என்பதனை இப்பொழுது இவர்கள் அகாலமாய் அங்கே சென்றுவிட்டபின்பு இங்கே உயிரும் உடம்புமாக இருக்கும் நாங்கள் புனித நினைவுகளோடு புரிந்துகொள்வோம். இந்தப் புரிந்துணர்வே சகோதர ஒற்றுமை, உடன்பிறப்பு பிணைப்பு, இரத்தபாசம் முதலியவற்றை எம்முள்ளும் வளர்த்தெடுப்பதற்கு உதவியாக இருக்கும்.

மாணிக்கம் அமைப்பின் மைந்தர்களில், அவர்களின் வம்சத்து மகனான மாணிக்கமாகிய யான் மேற்குறித்த யோசனைகளோடு அமைதிகொண்டு அவர்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

சாந்தி ! சாந்தி ! சாந்தி !

கணபதிப்பிள்ளை மாணிக்கவாசகர்
(மாணிக்கம்)
வம்சக் கொடியின் தளிர்

சுருவில்.
1989-02-28

உ
சிவமயம்

# எமக்குள் இருந்தனர் இராம இலக்குமணர்

சீரும் திருவுமலி செல்வாக்கும் மிக்குயர்ந்து
பாரும் விதந்துரைக்கும் பாங்கான சுருவினிலே
யாரும் பெறுதவொரு யாகத்தின் பெரும்பயனாய்ப்
பேரும் பொலியப் பிறந்தனரே நன்மக்கள் 1

நன்மையுடன் நல்வாழ்வு நற்கல்வி எனுமந்தத்
தன்மையிலே எங்குலத்தார் தழைத்தோங்க வித்திட்ட
கண்மணிகாள்! மைத்துனர்காள்! கற்கண்டோ! தேனோ! எம்
புண்ணியங்கள்! போனபின்பு புவனமினி எமக்கேது! 2

மூவர் மறைந்துவிட முதுகெலும்பாய் இருவரெனும்
தேவர் அனைய திறனுடையார் சண்முகமும்
ஆவல் பெருகும் அருமைச் சுப்ர மணியமுமாய்
நீவிர் இருந்தீர்கள் நினைப்பு மறந்திடுமோ 3

தீவத்தின் சிறுவணிகர் திரள்செல்வம் பெறுவதற்குத்
தூதுவராய் நீவிரெமைத் தூண்டிவிட்டீர் கொழும்பதனில்
ஆதரவாய் இக்குடிகள் அழகுதழைத் தோங்குதற்கு
நாயகமாய் இருந்துவிட்டு நடுவினிலே மறைந்ததென்ன! 4

இராமனுக்கோர் இலக்குமணன் இராப்பகலாய்த் துணையிருந்த
தீராத அன்புதனைத் தீட்டிவிட்ட கம்பனவன்
பாரானோ உங்களது பாரோங்கும் பாசமதைக்
கூறுவானோ இருவரியில் கூடப் பிரிந்தகதை 5

மைத்துனரே நீங்கள் மறைந்தீர்கள் என்றகதை
தைத்ததுவே வேலென்னத் தளர்ந்துவிட்டோம் யாமெல்லாம்
ஆக்ரோமே நொடிதானும் ஆருயிரைக் காணாது
வைத்தானோ ஆண்டவனோ வயிற்றினிலே பெருநெருப்பை 6

உழைத்துயர்ந்த செல்வங்காள்! உங்களுக்குப் போதுமென்று
பிழைக்க வந்த அன்பர்களைப் பெருவணிக ராக்கி வைத்தீர்
தழைத்தவர்கள் ஓங்குவதைத் தற்பொழுது பார்த்திருக்க
மறுத்தானோ கூற்றுவனும் மறைந்தீரோ! எமைவிட்டே! 7

சுருவில்,
ஊர்காவற்றுறை.
1989-02-28

வி. நா. இராமச்சந்திரர்,
சகோதரர்கள், சகோதரி,
குடும்பத்தினர் - இரங்கல்

# நல்ல வித்துக்கள்

நம்மூரின் வித்துக்கள்
நல்லதோர் குடும்பவிளக்கின் இருதிரிகள்
செம்மை மிகுந்த சுருவில் கிராமத்தின்
சிறப்பைக் கொடுத்திட்ட செம்மல்கள்

சின்ன வயதில் தலைநகரின் வர்த்தகத்தில்
சேர்ந்து பழகி வளர்ந்ததனால்
பின்னாளில் அங்கு பிதாமகர்கள் ஆகிநின்று
புகழ் தேடிக் கொண்டவர்கள்

சேர்த்த பொருளனைத்தும் சுகமாய் அனுபவிக்க
சிறிதேனும் எண்ணாமல்
யார்க்கும் கொடுத்து
மகிழ்ந்திட்ட பொன் மனங்கள்

ஈழத்தில் மட்டுமல்ல
அகிலமனைத்துமுள்ள ஆலயங்கள் பலவிற்கும்
அள்ளி வழங்கி நின்று
ஆண்டவனின் அருள் பெற்ற
இணையில்லா அடியவர்கள்

தாங்கள் அறிந்து வைத்த
தரமான வியாபாரத் தந்திரங்கள் பலவற்றை
வேண்டும் போதெல்லாம் பிறர்க்கு விளங்க வைத்து
பாடங்கள் போதித்த ஆசான்கள் இவர்கள்

பார்த்து நின்ற பல பேர்கள்
பதறியழும் போதினிலே
பகல் வேளை உயிர்துறந்த
பாரியின் வாரிசுக்கள்
போன இடம் நோக்கி
பக்தியுடன் பிரார்த்திப்போம்

தனக்கென வாழா நெஞ்சங்கள் நினைவிருக்கும்
தரணியில் இவர்கள் புகழ் நிலைத்திருக்கும்

நன்றி

சுருவில்
1989-03-03

சுருவில் இளைஞர் மன்றம்

உ
சிவமயம்
குருபாதம்

எல்லையற்ற பரோபகாரிகளும், தான தரும சீலரும். சுருவில் வாசரும் பிரபல வணிக வேந்தரும் ஆகிய திருவாளர் இளையதம்பி சண்முகம் சமாதான நீதவான் அவர்களும் இளையதம்பி சுப்பிரமணியமும் இராமலக்கு மணர்களைப் போல இணைபிரியாது வாழ்ந்து எதிர்பாராத வண்ணம் 6-2-89 இல் அமரத்துவம் எய்தியமை குறித்துச் சொல்லிய நினைவு அஞ்சலி

## வெண்பா

நீதிமலை மேல்வைகும் நிறைசுருவில் சண்முகமும்
மதிசுப்பிரமணியத் தம்பியுமாய் – வதியும் மேல்
மாடியில் உற்றே மயங்கி விழுந்து பெற்றார்
பீடார் சிவபதப் பேறு. 1

என்றால் இசைக்கவற்றோ என்போல்வார் எல்லாரும்
சொன்னாலும் முற்றுமோ சோகநிலை – அன்னைபால்
சேர்ந்தடுத்து வந்திருவர் சேரர் வெடியதனால்
சார்ந்தனர் விண்ணூர் ஒன்றாய்த்தாம். 2

## திதி வெண்பா

தைவிபவ நரலாறு சாருமமாவாசையிலே
சைய நிகர்ப்புயச் சண்முகமும் – மெய்யன்பு
சார் சுப்பிரமணியத்தம்பி சகிதமாய்
சேர்ந்து பரம்பெற்றார் சிவ.

## ஆசிரிய விருத்தம்

ஒருவரும் ஈடில் சண்முகமே
    ஒருங்குறு சுப்பிரமணியத் தம்பி
இருவரும் அடுத்துப் பிறந்தீர்கள்
    இருவரும் ஒன்றாய்ப் பிரிந்தீர்கள்
வருவது போவது சகசம் தான்
    வந்த முடிவில் நடுங்குகின்றோம்
பெருகிய கொடையீர் மேலுலகில்
    பேறுயர் உமக்கு அஞ்சலியே. 1

தந்தைதாயர் செய்த தவம்
    தவமுறு மக்கள் எல்லரும்
சிந்தை அன்பு கொடை தருமம்
    செய்தே வாழ்ந்தீர் சோதரரே
இந்த விதமாய் இருவீரும்
    ஏகுவதென்றால் யார் சகிப்பார்
முந்தை வினையின் அளவிதுவோ
    ஏற்றிடுவீர் எமதஞ்சலியே. 2

துலங்கு கொழும்பில் சொந்தமதாய்
சூழும் மாளிகை மேல்மாடி
இலங்கிக் கொலுவாய் இருவீரும்
இருந்தென் கதைத்தீர் என்சொல்வோம்
சலங்கொள் பாண்மைச் சண்டாளர்
தம்மால் எங்கு பிரிந்தீர்கள்
புலம்பி அழுவோம் நடுங்குகிறோம்
புண்ணிய சீலர்க்கு எம்மஞ்சலியே. 3

நீறும் பொட்டும் நிலவு நெற்றி
நிறையும் உறுதி தளர்வில் கதை
ஏறுபோலும் பீடுநடை
எவர்க்கு மஞ்சாதியல் மாண்பு
வீறு பெருமைச் சண்முகமே
மேவு சுப்பிரமணியத் தம்பி
பேறு வானில் எய்தியுற்றீர்
பெறுவீர் எமதஞ்சலியே. 4

ஆயிரம் ஆயிரம் கோயில்கட்கு
அரிய பணிகள் நிறைவேற
நேயமோ டிந்தே உவந்திருந்தீர்
நேரும் வறியார் குறை தீர்த்தீர்
ஏயும் பெருமை தான்வந்து
எய்திக் குடிகொள் தன்மையுள்ளீர்
தாயும் தந்தையும் செய்தவமோ
சாற்றுதிர் ஏற்பீர் எமதஞ்சலியே. 5

அகில உலகும் பறந்து சென்றே
அணியார் வணிகத்துறை பெருக்கி
மிகு பொன் தேடும் உயர்வதனில்
மேவும் ஈழமதனில் முன்னாய்
திகழ் சண்முகமே உயர்தம்பி
செயமார் சுப்பிரமணிய வள்ளல்
புகு மேலுலகில் நின்றேர்ப்பீர்
புகலும் எமது அஞ்சலியே. 6

சுருவிலுறு குலதெய்வம் ஐயனார் வைகும்
தூய திருக்கோயிலுறு நிர்மாண வேலை
விரிவாகச் சிறப்பமைய புண்ணியமுமாற்றி
வீதியிலோர் அன்னதான மண்டபமும் கட்டி
திருவிழா நாளெல்லாம் அன்னதானம்
செய்வதனை ஆக்கி வைத்த பெரிய தொண்டர்
அருமையுறு சண்முகமே தம்பியோடும்
ஆவா எங்கெய்தினீர் உமக்கு எம் அஞ்சலியே. 7

முன்வரும் அண்ணர் மூவரும் பிரிந்தார்
முகங் குளிர்வாக ஈங்கிருந்த
பின்வந் தம்பி இருவரும் இவ்வாறு
பேச்சின்றிப் பிரிந்தன ரென்றால்
என்றிலை என்னே ஐவருடன் வந்தும்
இன்று தனித்தேன் ஏங்குகின்றேன்
என்னப் புலம்பும் அருமை அக்காவை
எண்ணுமல் மறைந்தீரே ஏற்பீர் எம் அஞ்சலியே. 8

மங்கல மணியாம் மனோன்மணியை
நவமணியான மக்களினை
தங்கிய சுற்ற மித்திரரை
தழலில் வெண்ணெய் என உருக
பொங்கிய கண்ணீர்தனில் குளிக்க
புகுந்தாய் மேலூர் சண்முகமே
எங்கும் கீர்த்தி நிறைந்தவனே
ஏற்பாய் இங்குஎம் அஞ்சலியே. 9

மெல்லியல் கெங்கா லட்சுமியும்
விரும்பும் மணியும் மக்கள் ஐவர்
சொல்லும் சுற்றம் எல்லாமும்
துளங்கு கண்ணீர் முகம்வார
நல்லகுண சுப்பிரமணிய
நன்மை நிறைந்தோய் நாடாமல்
ஒல்லை பிரிந்தாய் முறையாமோ
உளம் கொள்வாய எம் அஞ்சலியே. 10

## தேற்றம்

நாட்டுக்கு நல்லோர் இவ்வாறு
நடுவயதில் போமாறுன்னி
வீட்டில் யாரும் புலம்பியென்ன
விதியின் வழியே நிகழுமிது
சேட்டமுறு சண்முகமே நீர்
திகழும் தம்பியுடன் சென்று
வாட்டமுறுத்தி எம்மையெல்லாம்.
மயங்க வைத்தீர் ஓம் சாந்தி.

சைவத் தமிழ் பேரறிஞர்
ஸ்ரீமத் ச. மகாலிங்கம்
சமாதான நீதவான்

வேலணை.
1989 03-03

# சண்முக - சுப்பிரமணிய நினைவு முகம் - ஒரு நோக்கு

வெண்பா

பல்லோர் புகழ்விபவ பார்ப்பனித் தைத்திங்கள்
அல்லார் அமாவாசை யாந்திதியில் — நல்லோர்எஞ்
சண்முகமுஞ் சுப்ர மணியமுஞ் சார்ந்தனரே
கண்ணுதலோன் எந்தை கழல்.

வேறு

பூரணைக் கிறைவா என்றும் புட்கலை கணவா என்றும்
ஆரணந் துதிக்கும் எங்கோன் அரிஹரன் அருளி ஞலே
தாரணி அதனில் மேன்மை தங்கிய சுருவில் ஊரின்
சீரணி எடுத்துச் சொல்லச் சேடனும் வல்லன் ஆமோ.

சொல்லரும் பிறவிதோறுந் துன்பமே கண்ட ஆன்மா
நல்லருந் தவத்தால் வீடு நண்ணினுல் மீண்டு மீளா
மல்லலம் புவியில் வாழ்வோர் மகிழ்வொடு சுருவில் உற்ருல்
எல்லையில் யுகங்கண் டாலும் இடம்பெயர்ந் தேகார் ஐயா

வேறு

இவ்வசைய திருநாட்டில் ஏர்வளத்தால் இசைபரப்பும் ஏற்றங் கொண்டே
எவ்வுலகும் போற்றிசெய எழில்வேளாண் குலமதனில் ஏறு போல்வான்
அவ்வியமில் மனத்தையன் அன்பாளன் இளையதம்பி அமிர்தம் ஒத்த
செவ்வியநல் மொழிமங்கை மாரிமுத்துச் செல்விதனைச் சேர்ந்து வாழ்நாள்

வேறு

பின்வரும் உயர்வைக் காட்டப் பிறந்தனன் மாயன் ஒப்பத்
தன்பெருஞ் சுற்றம் எல்லாந் தழைத்திடச் செய்வோன் என்றே
பன்னருங் கணிகன் கூறப் பண்புடைச் செல்வன் எங்கும்
முனவரும மேலோன் சிற்றம் பலமெனும் முதலவன் வந்தான்

## வேறு

வீர விசயன் எனப்பலரும் வியந்து போற்றும் மேன்மையினுன்
ஆரம் பூண்ட மார்பழகன் அன்புக் கிளைக்கோர் பெருந்துணைவன்
ஈர நெஞ்சன் இன்சொல்லன் இரப்போர்க் கென்றும் உவந்தீயும்
வாரம் மிக்கோன் மாணிக்கம் வாய்மை மன்னன் பின்வந்தான்

## வேறு

சீரதனுல் கல்வியினுல் செல்வத்தாற் சீலத்தாற் றெய்வப் பண்பாற்
போதனுல் மனைச்சிறப்பாற் பெரியோர்கள் புகழ்ந்தேத்தும் பேற்றால் மேலாம்
ஏரதனுல் நேரவர்முன் அரியேருய் எதிர்த்தடக்கும் இயல்பால் இந்தப்
பாரதனில் ஒப்பெவரும் பகரவொண்ணு நல்லதம்பி பகலோன் வந்தான்.

## வேறு

முன்னைக் காஞ்சிப் பெரும்பதியில் முறையாய் எண்நான் கறமிழைத்த
அன்னை உமையாள் அப்பதியை அகன்றே அருளால் எமைப்புரக்கப்
பின்னைச் சுருவிற் பெரும்பதியைப் பேணி அடைந்த பெற்றியென
மின்னை நிகர்க்கும் யோகம்மா மேன்மை நல்கப் பிறந்தனளே.

வஞ்சம் அறியா மனத்தையன் வளரும் நிதிக்கோர் உயர்தலைவன்
தஞ்சம் அடைந்தோர் தமைத்தாய்போற் ருங்குந் தருமன் தகவுடையான்
நெஞ்சம் நிறைந்த சீராளன் நேயம் மிக்கச் சண்முகமாம்
பிஞ்சு மனம்போல் மகிழ்ந்திருக்கும் பெரியோன் வந்தான் பேருலகில்

போற்றும் ஒழுக்கம் பொறையடக்கம் புதுமை காண விழையுமுள்ளம்
மாற்றில் உயர்ந்த பொன்போல மன்னுங் குடிக்கு மகுடமென
ஏற்றங் காண இளம்பருதி எழுமான் தேரை விட்டிங்கே
தோற்றஞ் செய்த தன்மையெனச் சுப்ர மணியந் தோன்றினனே.

இன்ன மக்கள் இறையருளால் ஏற்றம் நல்குங் கலைபயின்று
கன்னல் புளிக்க மொழிபேசிக் காதற் சுற்றங் களித்தேத்தப்
பொன்னம் புவியில் மக்களெலாம் புகழ்ந்து நிற்க வளர்ந்துயர்ந்து
பின்னர்க் காணும் பெருநிலைக்குப் பெரிதும் உதவும் நிலைதேர்ந்தே

அம்மை அப்பா என்போரை அழகாய்ப் பேணி ஆதரிக்கத்
தம்மைத் தஞ்சம் எனவந்து தாழ்ந்து நிற்போர் தமக்குதவ
இம்மை வாழ்வில் இன்பமுற இனத்தோர்க் கென்றும் உதவிவர
தம்மை உயர்த்தத் தாரணியில் தனமே வேண்டும் எனநின்ருர்.

## வேறு

நாற்றிசையும் புகழ்மணக்கும் நம்பியெங்கள் குழந்தையென நாடு போற்றும்
வேற்பிள்ளை கொழும்பதனில் வியாபார நிலையமதை விரும்பி ஆக்கிச்
சாற்றரிய பெருஞ்செல்வந் தழைத்தோங்க தனங்குநிகர் தானே என்ன
வீற்றிருந்தான் சுருவிலெனும் வியன்பதியும் வீறுற்றே விளங்கிற்றம்மா.

பேர்விளங்கும் வியாபாரப் பெருநிலையம் பேணிடவே பெருமை யாக
சீர்விளங்கும் உடன்பிறப்பார் மக்களையும் அழைத்தங்குச் சேர்த்துக் கொண்டே
தார்விளங்கும் வேற்பிள்ளை தான்வாழக் குடிவாழச் சால்பிறேடுங்
கார்வாழுங் கண்டத்தான் கருணையினுல் காசியினில் களித்து வாழ்ந்தான்

தலைநகரில் வர்த்தகத்திற் றன்னெப்பார் இல்லாத தகைமை வீற
மலைநிகருஞ் செல்வவளம் வானுலக இந்திரனே வந்தா னென்னச்
சிலைநிகரும் வேற்பிள்ளை திகழ்காலை யாவருக்குந் தெரியா வண்ணம்
இலைநிகரும் படைக்கூற்றன் எடுத்தகன்றன் இருஞ்சுற்றம் ஏங்கி வாட.

## வேறு

அதன்பின் வணிக நிலையத்தை அகன்றே அண்ணன் தன்னேடும்
மதன்னேர் அழகன் மாணிக்க வள்ளல் நிலையம் நிறுவினுல்
இதஞ்செய் சிற்றம் பலஐயன் ஏற்றந் தருமோர் வணிகமதை
கதமே காணுச் சோதரரைக் கலந்தே நடத்தி வந்தனனே.

சின்னுள் அண்ணன் தன்னுடனே சிறப்பாய் வணிகந் தனைநடாத்திப்
பின்னுள் வண்மைச் சண்முகமும் பீடார் சுப்ர மணியமுமே
நன்னுள் ஒன்றில் அவர்தம்மை நழுவி நீங்கித் தாமிருவர்
பொன்னுள் ஒன்றில் வியாபாரம் புதிதாய்த் தொடங்கிப் பொலிவுற்ருர்.

## வேறு

நற்றவம் உதவ நல்லோர் நாடிட நானி லத்திற்
கற்றவர் போற்றி நிற்கக் கனதனஞ் சேர்த்தே அன்பாற்
பெற்றவர் தம்மைப் பேணிப் பெரும்புகழ் படைத்து நின்ருர்
செற்றவர் புரங்கள் செற்ற சிவனருள் கூட்ட ஐயா

பொன்பொருள் பொலிந்தே ஓங்கப் புவியிடைப் பலருஞ் சூழ
மன்பெரு மாண்புவீற மலர்த்திரு மகிழ்ந்து நாடத்
தன்பெருங் குலத்தோர்க் கெல்லாந் தகுமுறை உதவி நின்றே
முன்னெரு வருக்கும் எய்தா முதன்மைபெற் றுயர்ந்து வாழ்ந்தார்

## வேறு

வெள்ளம் அனைய பெருநிதியம் விரும்பி வந்து சேர்பொழுதும்
உள்ளஞ் சிவன்பால் அகலாதே உலக வாழ்வில் மயக்கின்றிக்
கொள்ளும் அறங்கள் பலஆற்றி குலத்தின் ஒளியாய் வாழ்ந்தகன்ற
வள்ளல் எங்கள் மாணிக்க மணியின் வணிகப் பொறுப்பதனை

ஏற்றுக் கண்ணை காக்குமிமை என்னக் கருத்தாய்ப் போற்றிநின்று
நோற்றுச் சிறந்த யோகம்மா நோகா முறையில் நிதிபெருக்கி
ஆற்று நீர்போற் பெருக்குற்றே அணைந்தார் தம்மைப் புரந்தென்றும்
விற்றே இருக்க வகைசெய்தார் விழுப்பம் மிக்க சோதரர்தாம்

## வேறு

பொன்பூத்துச் சீர்பூத்துப் புகழ் பூத்துப் புண்ணியமும் பொருந்தப் பூத்து
மின்பூத்து மேவலரை வெற்றிகொளும் விறல்பூத்து விளங்கி நின்று
தென்பூத்துத் தெய்வநலத் திருப்பூத்து திருமணத்தின் செவ்வி தானும்
முன்பூத்துச் சண்முகமும் முருகலர்சுப் ரமணியமும் முதன்மை சேர்நாள்

வெற்புநிகர் பெருந்தோளன் விருஞ்சனேர் கனகசபை வேந்தன் ஈங்கு
பொற்புவளர் ஆகத்தாள் புகழ்ச்செல்வி இன்மொழியாள் புனித மாது
கற்புவளர் பெருந்தேவி கவின்நாக மீனுட்சிக் கற்ப கத்தை
இற்பொலியும் உயர்வாழ்வில் இன்துணையாய் வாழ்காலை ஏற்றந் தந்த

## வேறு

பெண்ணில் உயர நோற்றமங்கை பேணும் நான்கும் மலர்கொம்பான்
விண்ணில் விளங்கும் கதிர்மதியம் வேளின் அரிய பெருநியம்
கண்ணின் மணிபோல் போற்றிநிதங் காக்குங் கற்பின் உயர்தெய்வம்
மண்ணில் மேலாம் மனேன்மணியாம் மலரிற் சிறந்த வனசமதை

காமன் அனைய சண்முகமாங் கனவான் ஈங்குக் கருத்தொன்றி
வாமம் மிக்க மணச்சபையில் மறையோர் ஆசி பலகூற
ஓமத் தீயின் முன்பாக உலக மெல்லாம் ஏத்தெடுப்பத்
தாமம் புனைந்தான் முன்செய்த தவந்தான் தாரா வொன்றுண்டோ

## வேறு

மங்கையர் மனதை வாங்கும் மதன்நிகர் நாக லிங்கப்
பொங்கிசை ஐயன் மேலாம் பொறிமயிற் சாயல நங்கை
திங்கள்நேர் வதனச் செல்வி சிவக்கொழுந் தென்னும் மாதை
இங்கவர் ஊழ்வந் தூட்ட இல்லறம் நடத்து நாளில்

## வேறு

பங்கய மலரைப் பாற்கடற்பரப்பை பலர்புகழ் தேத்திடும் மேலாஞ்
செங்கண்மால் மார்ப்பை வைகுந்த வாழ்வைச் சேடனின் பாயலை நீத்தே
மங்கலச் சுருவில் மாதவ மியற்ற மலர்த்திரு வந்தென வந்த
மங்கையர் திலகம் மாண்புறு குணங்கள் மலிகெங்கா லட்சுமி தன்னை

## வேறு

நல்வினையின் பயன்கூட்ட நானிலத்தோர் மகிழ்வெய்த நலமே செய்த
பல்பிறவி களிலெல்லாம் பயில்கேண்மை தொடர்ந்துதவப் பண்பு மிக்க
இல்லறமும் இனிதுயர இறையருளால் என்றென்றும் இன்பம் ஓங்கத்
தொல்சுருதி வழிநின்று சுப்பிரமணி யன்மாலை சூட்டி ஞஞல்

## வேறு

மன்னன் அனைய சண்முகமும் மனையாள் மேலாம் மனோன்மணியும்
பின்னம் இல்லாப் பெருவாழ்வில் பிரிவே அறியாப் பெற்றியராய்
முன்னஞ் செய்த தவமுத மூவாச் செல்வ வளமோங்க
பொன்னம் புவியில் வாழ்காலைப் பொற்பார் மக்கள் தோற்றினரால்

## வேறு

நான்முகத் தொருவன் என்பார் நந்தகோ பாலன் என்பார்
மான் மழுக் கரத்தன் என்பார் மயில் மிசை ஊர்தி என்பார்
வான்பதிக் கிறைவன் என்பார் வடிவுடைக் காமன் என்பார்
தேன்மொழிக் குரிசில் செல்வச் சிறீதரன் பிறந்த போதே

## வேறு

குலத்தை விளக்கும் ஒளிமணியாய்க் கோலஞ் சிறந்த கோமளமாய்
நலத்தை அன்றி பிறிதறியா ஞானம் நிறைந்த நாமகளாய்
வலத்தைக் கொடுக்குந் தெய்வமதாய் வண்மை சிறக்குந் தருவென்னத்
தலத்திற் கௌரி பிறந்தனளே தனக்குத் தானே நிகர்மாது

முன்னம் இவர்தாம் செய்தவத்தால் முளரிந் திருவே வந்ததென
கன்னல் கசக்கும் மொழிச் செல்வி கற்றோர் ஏத்தும் பெரும்பண்பாள்
பொன்னம் பாவை அனைய எழில் பூத்த ஆகப் பொலிவுடையாள்
நன்னர் நடையாள் கௌசல்யா நாமத் தரசி வந்தனளே

## வேறு

மாண்புறு குணங்கள் வீற மன்னவன் மகனே என்னக்
காண்பவர் களிப்பால் போற்றுங் காமனுங் கடவு ளென்ன
ஆண்டகை தனக்கு வேண்டுஞ் சிறப்பெலாம் அடையப் பெற்றே
ஈண்டுநல் அன்பன் இன்சொற் கிரிதரன் எழிலாய் வந்தான்

கண்ணியம் மிக்கசீலன் கருணையின் உருவ மானோன்
புண்ணியம் நிறைந்த செம்மல் புரந்தரன் அனைய செல்வன்
எண்ணிய எண்ணி யாங்கே எழிலுற முடிக்கும் ஐயன்
தண்ணியன் சதுரன் சான்றோன் மனோதரன் உதித்தான் அம்மா

## வேறு

இன்சொல்லால் ஈகையினால் இறைதாளை எந்நாளும் ஏத்தும் ஆற்றால்
அன்பதனால பொறையடக்கம் அருஞ்சாந்தம் அகத்தூய்மை அதனால் மேலாம்
மன்னுமா தவமதனால் மங்கையரிற் சிறந்தொளிரும் மணியாம் என்று
பன்னுநற்சீர் மனோஹரியாள் பாரதனிற் பெருமைதரப் பண்பாய் வந்தாள்

## வேறு

உலகம் மூன்றின் கவினெல்லாம் ஒன்ருய் எடுத்துச் சிந்தித்தே
நிலனும் வானும் புகழ்ந்தேத்த நேயம் நிறைந்த எழிலுருவாய்க்
குலமும் கற்பும் உயர்வெய்தக் கொற்ற வாழ்வு குடிகொள்ள
நலமார் அருணு தனைப்படைத்தான் நாபிக் கமல நான்முகனே

## வேறு

கற்புநெறி தழைத்தோங்க கணவன் உயர்தெய்வமெனுங் கருத்து வீற
இற்பொலியுந் திருவென்ன இருங்குலத்தின் ஒளியென்ன எவரும் போற்றச்
சிற்பரனின் அருள்கூட்டச் சிறந்தகுண மலர்நான்குந் திகழ்ந்து காட்டப்
பொற்புமிகு நற்தக்ஷா யினியெனும் புகழ்க்கரசி பிறந்தாள் ஈங்கு.

## வேறு

பெண்மைக் கிவளே பொறைக்கிவளே பெருமைக் கிவளே பேசரிய
திண்மைக் கிவளே நெறிக்கிவளே திருவிற் கிவளே துணைக்கிவளே
உண்மைக் கிவளே உரைக்கிவளே உறவிற்கிவளே ஒளிக்கிவளே
தண்மைக் கிவளே எனப்பலருஞ் சாற்ற வாணி பிறந்தனளே.

குறியின் நின்று வாழ்ந்துயருங் கோமான் சுப்ர மணியமு நல்
நெறியில் நின்று வாழ்ந்துவரும் நேயக் கெங்கா லக்குமியும்
அறிவில் அறிந்தே அறமாற்றி அன்பாய் உலகம் எத்தெடுப்பச்
செறிவு நிறைந்த சிந்தையராய்ச் சேர்ந்து திகழ்ந்து வாழ்நாளில்

## வேறு

வான்வந்த தண்மதியம் வதனத்தின் வனப்பதனை வடித்துக் காட்டக்
கான்வந்த முல்லைமுகை கவின்நகையின் வனப்பதனைக் காட்டி நிற்க
மான்வந்த வெருட்சிநிலை மலர்க்கண்ணின் வனப்பதனை மதித்துக் காட்டத்
தேன்வந்த மொழிச்செலவி திருவனையாள் வனஜாநற் செல்வி வந்தாள்

## வேறு

புண்ணியத்தின் திருவுருவோ பொற்புமிகு மோருருவோ புகழால் மிக்கக்
கண்ணியமார் பெருந்திருவோ கலைமதியோ கற்பினுக்கோர் கடவுள் தானே
எண்ணரிய நான்குமலர் எழிற்கொடியோ விண்ணிழிந்தே இப்பார் வாழ
மண்ணிலத்து வளர்தருவோ எனமகிழ உயர்கிரிஜா மாண்பாய் வந்தாள்

## வேறு

முண்டக மலரோன் என்றும் மூவிலைச் சூலன் என்றுங்
கொண்டல்நல் வண்ண னென்றுங் குமரனுங் கடவுள் என்றும்
செண்டுடைத் தேவன் என்றுந் தேவர்தந் தலைவன் என்றுங்
கண்டவர் களிப்பால் போற்ற அசோகநற் கனவான் வந்தான்

வேறு

போற்றும் அடக்கம் பொறையொழுக்கம் பொங்கும் அறிவிற் கிருப்பிடமாய்
மாற்றில் உயர்ந்த பொன்போல மன்னன் தனது மகளென்ன
ஏற்றங் குடிக்குத் தரவந்த எழிலார் கலைமா திவளென்ன
தோற்றஞ் செய்தாள் சுந்தரமார் சுடராள் யசோதாத் தோகைமயில்

வேறு

மலைதரு மணியாள் சோலை மலர்தரு தேனுள் என்றும்
நிலைபெறு நெறியாள் தூய நித்தில நகையாள் ஓங்கும்
அலைதரு அமுதாள் மேலாம் அன்பினை அகத்துக் கொண்ட
சிலைதரு உருவாள் தெய்வ மாமென விஜிதா வந்தாள்

மருத்துவ நிபுணன் மாண்பார் கலாநிதிப் பட்டம் பெற்றோன்
கருத்தினில் உயர்ந்தோன் கற்றோர் களிப்புற நோய்கள் ஆய்வோன்
அருத்தியொ டுழைக்கும் ஐயன் சிறிதரன் என்னும் ஆன்றோன்
பெருத்துயர் குடிக்கண் பீடார் தர்சிஹாப் பெண்ணைச் சேர்ந்தான்

வேறு

சொற்போரில் யாவருமே தோற்றொ துங்கும் வழக்குரைஞன் சொல்லின் செல்வன்
கற்றோரும் மிகவிழையுங் கலைவல்லான் காமனையுங் கடந்து நின்ற
பொற்பாளன் ஜெயக்குமாராம் புனிதசீலன் புவியோர்கள் போற்றி ஏத்தக்
கற்பாருங் கௌரியெனு கவிஞரை திருமணத்திற் களித்துச் சேர்ந்தான்

பொய்யாத உள்ளத்தான் புகழ்க்குரிசில் பொன்னம்பல பிள்ளை என்றும்
ஐயாவென் றேத்தெடுக்கும் அன்பாளன் நடுவறியும் அறிவோன் தீங்கு
மெய்யாகச் செய்தறியா மேன்மைமிகு அதிகாரி வேந்தை ஒப்பான்
கொய்யாத மலரனையாள் கௌசல்யா கோமளத்தைக் கூடி வாழ்ந்தான்.

வேறு

சந்திர வதனஞ் செய்ய தாமரை விழிகள் விஞ்சும்
செந்துவர் கொவ்வைச் செவ்வாய் திகழ்ந்திடும் முத்து மூரல்
சுந்தரப் பொலிவு நீலத் தோகையஞ் சாயல் ஷைலா
புந்தியில் மகிழ்ச்சி பொங்க மனோகரப் புனிதன் சேர்ந்தான்.

பொறியியல் நிபுணன் என்று போற்றிநின் றுலகம் ஏத்த
நெறியினில் நின்று வாழ்ந்த சிவாணனும் நேயச் செம்மல்
அறிவருள் ஒழுக்கம் மிக்க மனோஹரி அரிவை தன்னை
உறவினுற் கூடிநின்றே உம்பரை உற்றுன் அம்மா

## வேறு

நிலவும் போரால் வைத்தியநல் நிபுணன் என்று பேர்படைத்த
திலகப் பிரகாஷ் செய்தவத்தால் செய்ய கமலத் திருவன்ன
அலகில் சீர்த்தி மிக்குடைய அருணு என்னும் அரமுதை
உலகம் போற்ற மணம் வேட்டு உயர்ந்த வாழ்வில மகிழ்ந்தனரே.

பச்சை மயிலின் மீதுலவும் பரமன் என்னப் பலர்போற்றி
மெச்சும் சச்சி தானந்த மேலோன் உயர்ந்த கணக்காளன்
அச்சம் முதலாம் அருங்குணங்கள் அமைந்த தக்ஷா யினிமாதை
இச்சை கொண்டு சேர்ந்தம்மா ஏனோ தேவர் நாடுற்ருன்.

## வேறு

பொறியியல் நிபுணன் போற்றுங் கலாநிதிப் பட்டம் பூண்டோன்
குறியினில் நின்று வாழ்வோன் கொற்றத்தை விரும்பும் ஐயன்
அறிவன அறிந்த வாணி அயன்மனே அனையாள் தன்னை
வெறிகமழ் மாலை சூட்டி விருப்பிஞல் மேவி நின்ருன்

## வேறு

வாமநுதல் யோகம்மா மாணிக்க மணியென்போர் தவத்தால் வந்த
காமனையும் வென்றெளிருங் கட்டழகு தாங்கிநின்ற கலைகள் தேர்ந்தே
தேமதுர மொழிபேசி செகமெல்லாந் தன்னடியைச் சிறப்பாய்ப் போற்ற
நாமமது தவயோக ராசனென நவின்றிடவே நலங்கள் ஓங்கும்

கோமகனைக் குலக்குன்றைக் குணம்நிறைந்த பெருநிதியைக் குறிப்பால் தேரும்
மாமகனை பலசெல்லாம் மலிந்துயரும் மாமணியை மகிழ்ந்தே ஈங்குப்
பூமகளை நிசர்வனஜா பிறப்பெல்லாம் புரிதவத்தால் பொருந்தி மேல்வாழ்
காமலருங் கற்பகந்தான் கலைத்தொதுங்க தருமங்கள் கணித்துச் செய்தார்

சண்ணியத்தின் இருப்பிடமாய்க் கவின்விளங்கும் பெருங்குடிதான் கனிவாய்ச் செய்த
புண்ணியத்தின் பயனெனவே ஜெயராஜப் பொறியியலின் நிபுணன் வந்து
மண்ணிலத்தில் எழிற்கிரிஷா மாதுதன்னை மகிழ்வோடும் மலர்க்கை பற்றி
விண்ணிலத்து வாழ்வதனை விஞ்சிடுநற் பெருவாழ்வு வேட்டு நின்ருன்

## வேறு

இந்துநேர் வதன இன்மொழி மீரா எழிலமிகு ஜெஞர்த்தனன் என்போன்
முந்நூறு வீரன் இலக்மன முதல்வன் முகமலர் ஐங்கரன் மேலாம்
அந்தமில் அழகி அபிராமி அன்பன் அருட்குமார் யாரினும் மிக்க
சுந்தர ஆரத்தி சுலஷஞ தனுஜா சுடர்மணி திவ்வியா தாரா

தலம்புகழ் செல்வி தவத்தினில் வந்த சாரு செளமியா என்பாள்
பலர்புகழ் மங்கை பனிமதி முத்தான பைரவி கிருத்திகா தேவி
நலந்திகழ் மயூரன் நாடுருஞ் செல்வ நளினநேர் தாரனிச் செல்வம்
குலந்திகழ் பேரர் ஆமெனக் கொண்டு குதூகலம் உற்றனர் அம்மா

வேறு

பேர்படைத்த கொழும்புநகர்ப் பெருவணிகர் தாமென்னப் பிறங்கி நின்ற
சீர்படைத்த சண்முகமுஞ் சேர்சுப்ர மணியமுமே திகழுங் காலை
தார் படைத்த அரசாங்கத் தலைவர்களுங் கருகமுற்றத் தலையைத்தாழ்ப்பார்
பார் படைத்த மக்களெலாலாம் பண்புடனே அவர்மொழியின் பற்றி நிற்பார்

ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் இணையிங்கே எவர்தான் என்னப்
போற்றுநிதி மலையெனவே பொன்சொரிந்து வளங்கூடிப் பொலிந்து தோன்ற
நீற்றினறன் தாள்கடமை நெஞ்சத்து மறவாத நினைப்பி னேடும்
ஊறறுநீர் எனஉதவி உலகூட்டி நலம்புரிந்தே உயர்ந்து வாழ்ந்தார்

வர்த்தகத்தின் வேந்தென்று வையமெலாம் அடிபணிந்து வாழ்த்தி நிற்கச்
வித்தகத்தின் இருப்பிடமாய்ச் சண்முகஞ்சுப் ரமணியமும் விளங்கித் தோன்றச்
இத்தலத்தில் இருங்கோடீஸ் வரரென்ன எவர்களுமே ஏத்துக் கூறச்
சித்தியதால் எலாம்வல்ல சித்தரெனச் செய்தெல்லாஞ் சிறந்து வாழ்ந்தார்

வேறு

தலைநகர் வீதி எல்லாஞ் சண்முகம் பெயரைச் சொல்லும்
மலைநிகர் மாட கூடம் எங்கணும் மலிந்து தோன்றும்
அலைகடற் றுறையில் அன்னேர் பொருள்பல குவிந்து தோன்றும்
நிறைபெறு நிலையம் எல்லாம் நெருங்கிடும் மக்கள் கூட்டம்

வள்ளலே என்று கூறி வறுமையை ஒழிப்பார் மாந்தர்
எள்ளலே இன்றி யார்க்கும் இரும்பொருள் ஈந்து நிற்பார்
பள்ளமே சாரும் நீர்போல் பணமெலாம் வந்து தேங்கும்
கள்ளமே தெரியா ஐயர் களிப்புற வாழ்ந்தார் அம்மா

அரசினுக் குதவி நின்றுர் சபைகளை ஆட்சி கொண்டார்
பிரபென உயர்ந்தே என்றும் பெரியவர் தொடர்பு பெற்றுர்
வரவது பெருக்க வேண்டி வழிவழி தொழில்கள் ஓம்பி
மரபினில் தவரு ஐயர் அறவழி மன்னிக் கண்டார்

அரிஹரன் கோயில் தன்னை அழகுற அமைக்க வேண்டி
சரியெனச் சிந்தை செய்தே திருப்பணிச் சபையைக் கூட்டி
உரிமையின் நின்றே ஓங்கு தலைமையை உணர்ந்து சூட்டப்
பரிவுடன் ஏற்றுப் பண்பார் சண்முகம் பணிமேற் கொண்டார்

அன்னச் சாலை மண்டபமும் அரிய விவாக மண்டபமுங்
கன்னல் மொழியார் கல்விபயில் கவினுர் மாடம் பலவுதவி
இன்னும் வாழாக் கன்னியர்கள் இனிது வாழ இயல்புணர்ந்து
பொன்னும் மணியும் கொடுத்தென்றும் புந்தி மகிழ வாழ்வளித்தார்

## வேறு

நாட்டங்கள் மூன்றுடைய நாயகன்றன் அருள்வளத்தால் நானிலத்தில்
தேட்டங்கள் நிறைந்தபெருஞ் செல்வரென நேசத்தார் சிறப்புச் செய்யக்
கூட்டங்கள் வரவேற்குங் கொள்கையராய் வியாபாரங் கொற்றங் கொள்ளக்
கோட்டங்கள் பலநிறுவிக் கோக்களென வையத்திற் கூடி வாழ்நாள்

சூரியோத யத்தின்பின் சண்முகஞ்சுப் ரமணியமுந் தூய்மை யாக
காரியால யந்தனிலே கணக்குகளைப் பார்வையிட்டுக் களிக்குங் காலை
சேரிநாயா மெனவந்த தீயசக்தி தஞ்செயலால் சிந்தை நொந்து
சோரிகொட்டச் சோர்ந்தனராந் தூயஉயிர தொடர்ந்தனவே சுவர்க்கம் அம்மா

## சண்முகம் மனையாள் மனோன்மணி மனமழிந்திரங்கல்

## வேறு

வானை அளக்கும் பெருஞ்செல்வம் வறுமை தெரியாப் பெருவாழ்வு
தேனைப் பாலைப் புளிப்பென்னுந் தீஞ்சொல் மழலைச்சிறுரீட்டந்
தானை நிகர்க்கும் பெருஞ் சுற்றந் தாழ்ந்து நிற்கும் ஆளடிமை
கோனை நீத்த கோமகட்குக் குறிக்கும் இன்பம ஈந்திடுமோ

அன்பும் அறிவும் மிக்குயர்ந்த அருமை மக்கள் பலரிருந்துந்
துன்பம் எனக்குப் பொறுக்குதில்லை துரையே நின்னை நீத்ததினுல்
ஞன்பில் அதனை வெயில்போல எழிலார் அரசே எனைவாட்டக்
கன்னல் கசக்கும் மொழிச் செல்வா கருத்து மறந்து சென்றயே

## வேறு

அன்றலர் கமலந் தோற்கும் அழகிய முகமுங் கண்ணுங்
குன்றினை வென்ற நல்ல குலமணித் தோளும் என்றும
நன்றதே எவர்க்குஞ் செய்யும் நயனநல் நோக்கும் பாவி
என்றினிக் காண்பேன் நாத என்விதி ஈது தானே

## வேறு

எழிலுறுநன் மக்களெலாம் ஏற்றமுற இங்கிருக்கப்
பொழிகருணை மருமக்கள் புறத்திருக்க பொன்ருத
பழியில்மா செல்வவளம் பனிமலையை ஒத்திருக்க
இழிவெதனுல் வந்ததையா எமைநீங்க உரையாயோ

## சுப்பிரமணியம் மனையாள் செங்காலட்சுமி மனமழிந்திரங்கல்

கைம்மை நோன்பு நோற்றிங்கே காலங் கழித்து வாழ்வதினுல்
நன்மை ஒன்றும் இல்லையென நாளுந் தெரிந்தும் என்துணையாம்
உண்மைக் கணவன் செல்வழியே உலகம் நீத்துச் செல்லாது
பொய்மை உலக வாழ்வினிலே புரளப் பின்னுந் துணிந்தனனே

தவமே உடையேன் என்றென்று சாலப் பெரிதும் மகிழ்ந்திருந்தேன்
சிவமே பெருக்கும் புகழ்வாழ்வு சேரப் பெற்றேன் என்றுவந்தேன்
நவமாய்த் தீங்கு செய்தறியேன் நாடில் வந்த பழியறியேன்
அவமே ஏழை அழுதாற்ற ஐயா அகன்ற வாறெதுவோ

## வேறு

இந்திரன் ஒக்குந் தூய எழில்தரு மேனி தன்னை
இந்தநற் புவனத் தெப்போ ஏழையேன் காண்பேன் உன்றன்
சுந்தர வதன மக்கள் துடிக்கின்றார் துயரந் தன்னை
வந்துநீ போக்கா விட்டால் மாறுமோ துயரம் ஐயா

ஓவியத் தெழுத ஒண்ணா உருவுடைத் தலைவ இன்றே
பாவியை நீங்கிச் சென்றாய் பண்புளார் செயலும் ஈதோ
ஆவியைப் பிரியின் ஐயா அழகுடல் அடைவ தென்னே
காவியங் கண்ணீர் சோரக் கலங்கிறேன் கரைகா ணாதேன்

## மக்கள் புலம்பல்

எம்மைப் புரந்த நிலைநோக்கில் ஏழேழ் பிறப்பும் யாமுமக்குச்
செம்மை நெறியில் நின்றுபணி செய்தால் அதுவுந் தகுமாமோ
இம்மை வாழ்வில் எப்பணியும் இயற்றி அறியோம் இரங்குகின்றோம்
அம்மை அப்பர் பதமுற்றீர் அன்பாய் என்றும் எமக்கருள்வீர்

## வேறு

வாழ்வினில் ஏற்றங்கண்டு மகிழ்ந்துநாம் இருந்தோம் அந்தோ
ஆழ்கடல் உலகில் வெண்கண் அராமணி இழந்த தொப்பத்
தாழ்வெமக் குற்ற தப்பா தாமெமைப் பிரித லாலே
வீழ்ந்தெரி இறக்கா தின்னம் வீணிலே இருக்கின்றோமே

புண்ணியம் செய்தோம் என்று புவிதனில் வாழ்ந்தோம் அப்பா
நண்ணிய தெங்கள் பக்கம் நலமிகு வாழ்வாம் என்றே
எண்ணினம் அறியோம் அந்தோ இப்படி நிகழு மென்று
கண்ணியம் அறியாக் காலன் நும்முயிர் கவர்ந்தான் அந்தோ

## வேறு

போற்றுந் தெய்வம் நீயன்றிப் புவியில் யாமும் அறிந்த தில்லை
ஏற்றந் தந்த வாழ்வெல்லாம் ஈங்குத் தந்தோர் யார் ஐயா
நேற்று இருந்தீர் இன்றில்லை நினைக்க நெஞ்சம் வேகுதையா
காற்றுக் கடலில் அகப்பட்ட கலம்போல் நாமுங் கலங்குகிறோம்.

## மருமக்கள் புலம்பல்

மாமன் என்னும் நிலைநீக்கி மன்னுந் தாதை எனப்போற்றிச்
சேம மாக வாழ்ந்தோம்யாம் செல்வா உன்தன் தவநிலையால்
தாமந் தாங்கும் மாமாவே தமியேம் நித்தம் அழுதாற்ற
ஏமம் எமக்கிங் கில்லாதே எங்குச் சென்றாய் இயம்பாயே

தந்தை அணையாய் நீயகலத் தனையன் அனையோந் தயங்கி மிகச்
சிந்தை நொந்து அரற்றுகின்றோம் செய்வ தொன்றும் அறிந்திலராய்
வெந்த புண்ணில் வேலுற்ற வெம்மை உற்று வாடுகின்றோம்
எந்தப் புவனத் துற்றாய்நீ ஈங்கு வந்தே இயம்பாயோ

வேறு

முந்தைமா தவத்நாற் செல்வம் முதன்மைசீர் பெற்று வாழ்வோர்
இந்தமா நிலத்தில் பல்லோர் இருத்தலைக் கண்டோம் நும்போல
சிந்தையா லுயர்ந்தோர் தம்மைத் தேடினும் அரிதே காணல்
வந்ததென் குறைதான் மாமா கூறிடாய் வானிற் செல்ல

## சகோதரி யோகம்மா புலம்பல்

பேராருந் தெய்வமெனப் பிறங்கியவென் கணவனெனைப் பிரிந்த போதும்
தாராருஞ் சகோதரரே தளர்வெனக்கு வாராதே தடுத்து நின்று
சீராரும் என்மக்கள் சிறப்புடனே பெருவாழ்வில் நிகழ வைத்தீர்
நீராருங் கடற்புவியில் நீர்பிரிந்த துன்பமதை நீக்கு வார்யார்

அக்காவென் றழைக்குமொழி அமிழ்தூறி அகங்குழைக்கும் அந்தச் சொல்லை
எக்கால மினிக்கேட்பேன் இயம்பாமல் ஏகினதும் ஏற்றமாமோ
முக்கால முணர்ந்தார்போல் முட்டில்லை உனக்கென்று மொழிந்த மாற்றம்
இக்காலம் மறந்தெங்கே எனைவிடுத்துச் சென்றனையா இயம்பீர் வந்தே

## சகோதரி மக்கள் புலம்பல்

வேறு

சூறுவளியாங் காற்றதனாற் சுழலும் துரும்பு போல்நின்றே
ஆறுத் துன்பம் எமைவாட்ட அன்புத் தாதை அகன்ற தற்பின்
வேறாய் எம்மை காணுதே விரும்பும் மக்கள் எனப்புரந்தீர்
ஆறாய்க் கண்ணீர் வடிந்தோட அழுதே அழுதே அரற்றுகின்றோம்

தந்தை மறைந்த துயர்தீரத் தந்தையாகி எமைப் போற்றிச்
சிந்தை மகிழ எமக்கெல்லாஞ் சிறப்பாய் நலகிச் செல்வநிலை
முந்தை வினையால் யாமடைய முறையாய்ப் போற்றிப் பெருவாழ்வு
தந்தீர் தந்தீர் நும்பிரிவு தாங்கோந் தாங்கோந் தாங்கோமே.

## மைத்துனர் மைத்துனிமார் புலம்பல்

வேறு

எங்குலத்தின் ஒளிமணியை ஏற்றமிகும் உயர்வாழ்வை எவரும் போற்ற
மங்கலமாய் எங்கெங்கு மகிழ்வோடு வந்தருளும் மன்னன் தன்னை
இங்குலகில் பிரியவைத்த இன்னல்தரு கூற்றுவனும் இறைவன் முன்னுள்
பங்கமுற உதைந்திட்ட பரிசதனை எண்ணிலனோ பாவி அந்தோ

## பேரப்பிள்ளைகள் பிரலாபம்

வேறு

சோலையிலே தான்திரியுஞ் சொல்லரிய நற்குயில்காள்
காலையிலும் மாலையிலுங் காதலுடன் — பாலைநிகர்
நன்மொழிகள் பேசிவரும் நற்பாட்டா நாம்வருந்தச்
சென்றவிடஞ் செப்பீர் தெரிந்து.

மாவின் தளிர்கோதி மாண்புறவே தன்பேட்டைக்
கூவி விளையாடுங் கோக்குயில்காள் — பாவியேம்
துன்பமுறச் சென்றடைந்த தோன்றறலை காட்டீரோ
இன்பமுற நாங்காண இன்று

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்றென்ற — ஆற்றோனும்
வள்ளுவன்றன் வாய்மொழியே வாழ்ந்துயர்ந்த கோமகனைக்
கிள்ளைகாற் சொல்லீரோ கேட்டு

## ஊரார் பிரலாபம்

### வேறு

புலப்பெருமை மிகப்படைத்தீர் புகழ்பரப்பிப் பொன்றாத ஓங்கு செல்வ
நிலைப்பெருமை மிகப்படைத்தீர் வலம்புரியின் நித்திலம் போல் நிலாவுந் துய்ய
குலப்பெருமை மிகப்படைத்தீர் குணப்பெருமை மிகப்படைத்தீர் குறையா ஆயுள்
பலப்பெருமை படைத்திலிரே பண்புடையீர் அதுவுமெங்கள் பாவம் தானே

மன்னுமவை மணிவிளக்கை வளர்மதியின் முகத்தோரை வளங்கள் கூட்டும்
நன்மைமிகு சுருவிலூர் நடைமணியை நடுநிலையின் நாயகத்தை
இன்முகங்கொண் டெவர்தமக்கும் இதமளிக்கும் குணக்குன்றை இன்ப ஆற்றை
பன்னலமார் பெருமைமிகு பண்பீரைப் பிரிந்ததெங்கள் பாவந்தானே

### வேறு

அம்புலி யதனை அடைந்ததும் தண்மை ஆழ்கடல் அடைந்ததும் கீர்த்தி
உம்பரின் தருவை அடைந்ததும் கொடைகள் உதவகன் அடைந்ததும் தேகம்
செம்மலர்த் திருவாள் மாலினைச் சேர்ந்தாள் சிறுத்தையை அடைந்ததும் வீரம்
இம்பரில் நாங்கள் யாரிடம் போவோம் எமையெமை பிரிந்ததிங் கியம்பீர்

### வேறு

கோயில்கள் அமைக்க வேண்டில் குளம்பல தோண்ட வேண்டில்
வேய்நிகர் தோளினார்க்கு விரும்புநல் விவாகம் வேண்டில்
மாயிரு ஞாலந்தன்னில் யாரிடம் மகிழ்ந்து செல்வோம்
பேயிநீர் நீங்கள் என்றால் புண்ணியம் வாழ்தல் உண்டே

அலர்த்தவர்க் குணவு வேண்டில் அடியவர்க் கடிசில் வேண்டில்
தலந்தனிற் கல்விச் சாலை தகுமுறை அமைக்க வேண்டில்
நலந்தரு சபைக ளெல்லாம் நன்முறை இயங்க வேண்டின்
வலந்தரு பெரியீர் நீவிர் இல்லெனில் வழங்கு வார் யார்

சுருவிலுக் கொளிகால் மேலாஞ் சோதிகள் இரண்டும் ஒன்றாய்ப்
பொருவருந் துன்பந் தந்தே போயின புகல்வ தென்னே
பெருநிலத் துயர்ந்து நின்ற பீடுடைச் சுருவி லூரை
இருள்மிகச் சூழ்ந்து கொண்ட என்செய்வோம் ஏழையோமே.

சித்திரத் தேருஞ் சீர்சால் கோபுர முகப்பும் எல்லாம்
இத்தரை இடத்தே எங்கள் அரிஹரன் கோயி லுக்கே
வித்தக நிலையில் கட்ட விரும்பிநாம் முயலும் போதே
உத்தமர் நீவிர் சென்றால் உதவுவார் யார்தான் ஐயா.

## கடைசிப்பந்திகள் பிரலாபம்

இனத்தினிற் சிறந்து நின்றே எம்மவர் தம்மை அன்பாய்ச்
சினத்தினை அகற்றி வேண்டும் பொருளெலாஞ் சிறப்பாய் ஈயுந்
தனத்தினில் உயர்ந்த நீவிர் தண்ணளி செய்த தெல்லாம்
மனத்திடைக் கண்ட தீய கனவென மறைந்த தம்மா

## முகாமையாளர் அமிர்தலிங்கம் பிரலாபம்

சிறிய வயது தொட்டென்னைச் சிறப்பாய்ப் பேணி ஆதரித்தே
நெறியில் நானும் வாழ்ந்துயர நேயக் கரங்கள் தந்துதவி
அறிய வேண்டும் அவையெல்லாம் அறிந்து வாழ உதவிய நீர்
வறிதே இருந்து வருந்திடநான் வையம் நீத்த வகையறியேன்

## தேற்றம்

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு

## வாழ்த்து

வாழியவே சிவமதமும் வண்டமிழும் என்றென்றும்
வாழியவே உயர்சுருவில் வளம்பெற்று வண்மைமிக
வாழியவே சண்முகஞ்சுப் ரமணியந்தன் வான்புகழே
வாழியவே அவர்மக்கள் வளம்பொலியும் வாழ்வெல்லாம்.

சுருவில்.
1989-03-03

**வித்வான் சி. வைத்திலிங்கம்**
வண். நாவலர் ம. வி.
முன்னாள் அதிபர்.